# தினபூமி

thinaboomi.com

பூமி: 26 சுற்று: 23 ஆனி 20

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், வெள்ளி, ஜூலை 04, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




## விரைவில் கையெழுத்தாகிறது இந்தியா - அமெரிக்கா இடையே பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தம்

...2-ம் பக்கம்

## அடுத்த புத்த மதத்தலைவரை யாரும் தீர்மானிக்க முடியாது: சீனாவுக்கு இந்தியா பதிலடி

...3-ம் பக்கம்

## கேப்டனாக முதல் இரு டெஸ்ட் போட்டியிலும் சதம் அடித்து சுப்மன் கில் புதிய சாதனை

...6-ம் பக்கம்





● 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கையை மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி, 122-வது வட்டம், ஆழ்வார்பேட்டை 3-வது தெருவில் மக்களை நேரடியாக சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தி.மு.க. இணை அமைப்புச்செயலாளர் அன்பகம்கலை, மயிலாப்பூர் பகுதி செயலாளர் நந்தனம் மதி மற்றும் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.

### 'ஓரணியில் தமிழ்நாடு' பிரசாரம் துவக்கம்: சென்னையில்

# மக்களை வீடு வீடாக சென்று சந்தித்தார் முதல்வர் ஸ்டாலின்

### இயக்கத்தின் முக்கியத்துவத்தை நேரில் எடுத்துரைத்து கலந்துரையாடல்

சென்னை, ஜூலை 04-

**சென்னை ஆழ்வார்ப்பேட்டை பகுதியில் முதல்வர் ஸ்டாலின் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கம் குறித்து எடுத்துரைத்தார். இது குறித்து முதல்வர் தனது சமூக வலைதளப் பதிவில், `தமிழ்நாட்டின் மண்,மொழி, மானம் காக்க, சாதி, மதம், அரசியல் கடந்து ஓரணியில் தமிழ்நாடு வெல்லட்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.**

**ஆழ்வார்ப்பேட்டை...**

இதுதொடர்பாக தி.மு.க. தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ஓரணியில் தமிழ்நாடு' எனும் பிரச்சார இயக்கத்தை ஜூலை முதல் நாளன்று தொடங்கி வைத்தார். நேற்று (ஜூலை 3) காலை சென்னை ஆழ்வார்ப்பேட்டை பகுதியில் முதல்வர் ஸ்டாலின் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் குறித்து எடுத்துரைத்தார். இது குறித்து முதல்வர் தனது சமூக வலைதளப் பதிவில், "தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க, சாதி, மதம், அரசியல் கடந்து ஓரணியில் தமிழ்நாடு வெல்லட்டும்.

**தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காக்க, சாதி - மதம் - அரசியல் கடந்து ஓரணியில் தமிழ்நாடு வெல்லட்டும். இதற்காக அடுத்த 45 நாட்கள், கழக மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்ற உறுப்பினர்கள் - பாராளுமன்ற உறுப்பினர்கள் - மூத்த முன்னோடிகள் என அனைவரும் பரப்புரையில் ஈடுபட்டு, தமிழ்நாட்டிலுள்ள அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும்.**

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**அடுத்த 45 நாட்கள்...**

இதற்காக அடுத்த 45 நாட்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மூத்த முன்னோடிகள் என அனைவரும் பரப்புரையில் ஈடுபட்டு, தமிழ்நாட்டிலுள்ள அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும்." என்று கேட்டுக் கொண்டுள்ளார். 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கம் குறித்து ஆழ்வார்ப்பேட்டையில் பொதுமக்களிடம் சில கேள்விகள் அடங்கிய படிவங்களை முதல்வர் வழங்கி 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தின் முக்கியத்துவத்தை மக்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டு மகிழ்ந்தார்.

**முதல்வர் மகிழ்ச்சி...**

எந்த நெருக்கடியான சூழலிலும் தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காப்பாற்றப்பட வேண்டுமென்று நினைக்கிறீர்களா? என்று பொதுமக்களிடம் முதல்வர் ஒரு கேள்வியை முன்வைத்தார். அப்பொழுது "தமிழ்நாடும் தமிழ் மொழியும் வளமாக இருந்தால்தானே நாம் நலமாக வாழ முடியும். எனவே, தமிழ்நாடும், மொழியும், நமது சுயமரியாதையும் காப்பாற்றப்பட வேண்டியது மிக, மிக முக்கியம் என்று அவர்கள் பதிலளித்தார்கள். அதனைக் கேட்டதும் முதல்வர் மிகுந்த மகிழ்ச்சியோடு "அதற்காகத்தான் தி.மு.க.வும் இந்த அரசும் பாடுபடுகிறது" என்று தெரிவித்தார்.

**முதல்வர் கேள்வி...**

அடுத்துள்ள வீட்டுக்குச் சென்றபோது முதல்வரை எதிர்கொண்டு, மகிழ்ச்சியோடு வாங்க, வாங்க என்று அகமும் முகமும் மலர வரவேற்றவர்களை நோக்கி 'ஓரணியில் தமிழ்நாடு' படிவத்தை அளித்து, மகளிர் தங்கள் உரிமைத் தொகை பெற்றிடவும், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் நலன்களைக் காத்திடும் நலத்திட்டங்களை நாம் தொடர்ந்து பெற்றிடவும் வேண்டுமா? இல்லையா? என்று ஒரு கேள்வியை முதல்வர் முன்வைத்ததும், அங்கே இருந்தவர்கள் "ஆமாம், ஆமாம் இந்த மகளிர் உரிமைத் தொகை எங்களின் தன்மானத்தைப் பாதுகாக்கிறது."

(கடைசி பக்கம் பார்க்க)

### ரூ.52 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள

# 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

### ரூ.60 கோடியிலான 50 ஆரம்ப சுகாதார நிலையங்களும் திறப்பு

சென்னை, ஜூலை 04-

**தமிழகம் முழுவதும் மாநகராட்சி, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில்**

52 கோடி ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். மேலும், ரூ.60 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அவர் திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 125 கோடி ரூபாய் செலவில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் தலா 25 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு 6.6.2023 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட்டு, சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன. அதன் 2-ம் கட்டமாக, 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் தலா 25 லட்சம் ரூபாய் செலவில் ரூ.52 கோடி மதிப்பில் புதியதாக அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்காக முதல்வர் மு.க.ஸ்டாலினால் நேற்று திறந்து வைக்கப்பட்டன. மேலும், 60 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைத்தார்.

மேலும், அடையாறு, சாஸ்திரி நகரில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து, நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டார். ஒவ்வொரு நகர்ப்புற நலவாழ்வு மையத்திலும் தலா ஒரு மருத்துவர், செவிலியர், சுகாதார ஆய்வாளர் மற்றும் உதவி பணியாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார பணியாளர்கள் ஒவ்வொரு நலவாழ்வு மையத்திற்கு வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் சுமார் 20,000 முதல் 25,000 வரை உள்ள மக்களுக்கு காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 8 மணி வரையிலும் 12 ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளை "அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின்" கீழ் வழங்குவார்கள்.

மேலும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் மூலம் தரமான 12 அத்தியாவசிய சுகாதார சேவைகளான மகப்பேறு நல சேவைகள், பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை நல சேவைகள், வளர் இளம் பருவத்தினருக்கான சேவைகள், குடும்ப கட்டுப்பாடு சேவைகள், தொற்று நோய்களுக்கான சேவைகள், தொற்றா நோய்களுக்கான சேவைகள், கண், காது, மூக்கு, பல், வாய் மற்றும் தொண்டை நோய்களுக்கான சேவைகள், முதியோர் மற்றும் நோய் ஆதரவு நல சேவைகள், அவசர மருத்துவ சிகிச்சை சேவைகள், மனநல சேவைகள் மற்றும் யோகா போன்ற பல்வேறு நலவாழ்வு சேவைகள் நகர்ப்புற மக்கள், குறிப்பாக குடிசைவாழ் மற்றும் நலிந்த மக்களுக்கு தரமான முறையில் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, துணை மேயர் மகேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் செந்தில்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 20 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்படுவர்:

# 'நீட்' மறுதேர்வு நடத்தக்கோரிய மேல்முறையீட்டு மனு தள்ளுபடி

### சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூலை 04-

**நீட் தேர்வின்போது மின் தடையால் பாதிக்கப்பட்டதாகக் கூறி, மறுதேர்வு நடத்த கோரிய மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

இளங்கலை மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வு, நாடு முழுவதும் கடந்த மே 4-ம் தேதி நடத்தப்பட்டது. சென்னையில் அன்றைய தினம் பெய்த கனமழை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் தங்களால் சரியாக தேர்வு எழுத முடியவில்லை என்பதால் மறுதேர்வு நடத்த உத்தரவிடக் கோரி, ஆவடி கேந்திரிய வித்யாலயா பள்ளி மையத்தில் தேர்வு எழுதிய 13 மாணவர்கள் உள்ளிட்ட 16 பேர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கில், மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் நீட் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

மாணவர்கள் பெரும்பாலான கேள்விகளுக்கு பதிலளித்துள்ளதால் மறு தேர்வு நடத்த முடியாது என தேசிய தேர்வு முகமை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. இதையடுத்து, வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், நாடு முழுவதும் 22 லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதியுள்ள நிலையில் மறுதேர்வு நடத்த உத்தரவிட்டால் அது பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறி வழக்குகளை தள்ளுபடி செய்தது.

இந்த உத்தரவை எதிர்த்து மாணவர்கள் மேல் முறையீடு செய்திருந்தனர். இந்த மேல் முறையீட்டு மனுக்களை நீதிபதிகள் ஜெ.நிஷா பானு மற்றும் எம்.ஜோதிராமன் அமர்வு விசாரித்தது. தேசிய தேர்வு முகமை சார்பில் ஆஜரான வழக்கறிஞர், "வழக்கு தொடர்ந்த மாணவர்களில் பெரும்பாலானோர் மொத்தம் 180 கேள்விகளுக்கு 100 கேள்விகளுக்கு விடை அளித்துள்ளனர். ஒரு மாணவர் 179 கேள்விகளுக்கு விடையளித்துள்ளார்.

அதனால், மின்தடையால் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை." என தெரிவித்தார்.

இதையடுத்து, மறு தேர்வு நடத்தக்கோரிய மேல் முறையீட்டு மனுக்கள் மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்த நீதிபதிகள், நேற்று தீர்ப்பளித்தனர்.

நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், "தேர்வில் முறைகேடுகள் நடந்துள்ளதாக நிரூபிக்காத வரை, மறுதேர்வு நடத்த உத்தரவிட முடியாது எனவும், மறு தேர்வு நடத்த உத்தரவிட்டால் 20 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்படுவர் என்பதால், வழக்கை ஏற்க முடியாது." எனக் கூறி, மேல் முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

### திருப்புவனம் காவலாளி கொலை வழக்கு:

# 2-வது நாளாக நீதிபதி விசாரணை

மதுரை, ஜூலை 04-

**மடப்புரம் கோவில் காவலாளி கொலை வழக்கில் 2-வது நாளாக நீதிபதி விசாரணை நடத்தினார்.**

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்திரகாளியம்மன் கோவில் காவலாளி அஜித்குமார் (வயது 27), நகை திருட்டு வழக்கு தொடர்பாக குற்றப்பிரிவு தனிப்படை போலீசார் நடத்திய விசாரணையில் உயிரிழந்தார். தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த வழக்கில் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு 5 போலீசார் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த 2 நீதிபதிகள் கொண்ட மதுரை ஐகோர்ட்டு அமர்வு, காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் நீதி விசாரணை நடத்தும் வகையில் மதுரை மாவட்ட கூடுதல் நீதிபதி ஜான்சுந்தர் லால் சுரேசை நியமித்துள்ளது. அவர் முழுமையான விசாரணை நடத்தி வருகிற 8-ந்தேதி கோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இதையடுத்து நீதிபதி ஜான் சுந்தர்லால் நேற்று முன்தினம் திருப்புவனம் போலீஸ் நிலையம் அருகிலுள்ள பயணியர் விடுதியில் வைத்து விசாரணையை தொடங்கினார்.

அப்போது அவரிடம் வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்கள், சி.சி.டி.வி. காட்சிகள், சேகரிக்கப்பட்ட தடயங்கள் உள்ளிட்டவை சிவகங்கை மாவட்ட போலீசார் தரப்பில் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மடப்புரம் கோவிலில் பணியில் இருந்த உதவியாளர் சக்தீஸ்வரன், கோவில் இணை ஆணையர் அலுவலக உதவியாளர் பெரியசாமி, உதவி ஆணையரின் டிரைவர் கார்த்திக்வேல், பாதுகாவலர்கள் குமார், வினோத்குமார், கோவில் சி.சி.டி.வி. ஆபரேட்டர் சீனிவாசன், பிரவீன், நகை மாயமான காரை இயக்கிய அருண் உள்ளிட்டோரிடம் 12 மணி நேரமாக தொடர்ந்து விசாரணை நடத்தினார். அதே போல் கூடுதல் துணை போலீஸ் சூப்பிரண்டு சுகுமார், இன்ஸ்பெக்டர் ரமேஷ் குமார் ஆகியோரும் விசாரிக்கப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து நேற்று 2-வது நாளாக நீதிபதி ஜான் சுந்தர்லால் விசாரணை நடத்தி வருகிறார். அதே பயணியர் விடுதியில் வைத்து அஜித்குமாரை போலீசார் தாக்கியதை வீடியோ எடுத்த சக்தீஸ்வரன், கோவில் பாதுகாவலர்கள் வினோத், பெரியசாமி, பிரபு ஆகிய 4 பேரிடமும் தனித்தனியாக விரிவான விசாரணை நடத்தப்பட்டது. இந்த கள ஆய்வு மற்றும் விசாரணைக்கு பின்னர் பிற்பகலில் நீதிபதி ஜான் சுந்தர்லால், அஜித்குமார் கொலை வழக்கில் கைதாகி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள தனிப்படை போலீசார் 5 பேரிடமும் விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# வரும் 19-ம் தேதி அனைத்துக்கட்சி கூட்டம்: எதிர்க்கட்சிகளுக்கு மத்திய அரசு அழைப்பு

புதுடெல்லி, ஜூலை 04-

**பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரையொட்டி வருகிற ஜூலை 19-ம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.**

பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் வருகிற ஜூலை 21-ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 21-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதனிடையே சுதந்திர தினத்தையொட்டி ஆகஸ்ட் 13, 14 ஆகிய தேதிகளில் கூட்டத்தொடர் நடக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மழைக்காலக் கூட்டத்தொடருக்கு முன்னதாக வருகிற ஜூலை 19 ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் என்று மத்திய பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜுஜூ அறிவித்துள்ளார். மேலும் அனைத்துக் கட்சிகளும் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து அது தொடர்பாக விவாதிக்க சிறப்பு பாராளுமன்றக் கூட்டத்தைக் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. இதனால் பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் பற்றிய அறிவிப்பு இந்த ஆண்டு முன்னதாகவே (ஜூன் 4) அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மழைக்காலக் கூட்டத்தொடரில் முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| - 170.22 பாயின்ட் | - 48.10 பாயின்ட் |
| 83,239.47 | 25,405.30 |

**தங்கம்**
1 சவரன் ₹72,520
1 கிராம் ₹9,065

**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.45

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 500 சதவீத வரி: அமைச்சர் ஜெய்சங்கர் கவலை

**வாஷிங்டன், ஜூலை 04-**
ரஷ்யாவிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு 500 சதவீத வரி விதிக்க முன்மொழியும் அமெரிக்க மசோதா குறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கவலை தெரிவித்தார்.

அமெரிக்காவிற்கு நான்கு நாள் பயணமாகச் சென்றுள்ள அமைச்சர் ஜெய்சங்கர், வாஷிங்டனில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசியபோது, "இந்தியாவுக்கு தாக்கம் ஏற்படுத்தும் இந்த மசோதா குறித்து எப்போதும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம்.

ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 500 சதவீத வரி விதிக்கும் மசோதாவை ஆதரித்த அமெரிக்க செனட்டர் லிண்ட்சே கிரஹாமுடன் தொடர்பில் இருக்கிறோம். இந்த மசோதாவில் எங்கள் கவலைகள் மற்றும் அக்கறைகள் குறித்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல எரிசக்தி பாதுகாப்பில் எங்கள் கவலைகள் மற்றும் நலன்கள் குறித்தும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த மசோதா வரும்போது, நாங்கள் அந்தப் பாலத்தைக் கடப்போம்" என்று கூறினார்

முன்னதாக, குடியரசுக் கட்சி செனட்டர் லிண்ட்சே கிரஹாம் இந்த மசோதாவை அறிமுகப்படுத்தும் போது, அவர் இந்தியா மற்றும் சீனாவைப் பற்றி முக்கியமாக குறிப்பிட்டார்.

"இந்த இரு நாடுகளும் ரஷ்யாவின் எண்ணெயில் 70 சதவீத வாங்குகின்றன என்றும், இவர்களே புதினின் போர்ச்சக்கரத்தை சுழற்றுகின்றனர்" என்றும் கிரஹாம் குறிப்பிட்டார்

தற்போது ரஷ்யாவிலிருந்து இந்தியா அதிகளவு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருகிறது.

இது இந்தியாவின் எரிசக்தி தேவைகளில் சுமார் 40-45 சதவீத அளவுக்கு பூர்த்தி செய்கிறது. கடந்த மே மாதத்தில் இந்தியாவின் ரஷ்ய எண்ணெய் இறக்குமதி, 10 மாதங்களில் இல்லாத அளவுக்கு ஒரு நாளைக்கு 1.96 மில்லியன் பீப்பாய்களாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடிக்கு கானா நாட்டின் உயரிய விருது வழங்கி கவுரவம்



**டெல்லி, ஜூலை 04-**
பிரதமர் மோடிகக்கு கானா நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டது.

பிரதமர் மோடி 5 நாடுகள் பயணமாக டெல்லியில் இருந்து புறப்பட்டு சென்றார். முதலில், கானா நாட்டுக்கு சென்றார். பிரேசில் நாட்டில் நடக்கும் 'பிரிக்ஸ்' மாநாட்டில் பங்கேற்கிறார்.பிரதமர் மோடி, கானா, டிரினிடாட் அண்ட் டுபாகோ, அர்ஜென்டினா, பிரேசில், நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு ஒரு வார கால பயணமாக செல்ல திட்டமிடப்பட்டு இருந்தது. அந்த பயணத்தை அவர் நேற்று முன்தினம் தொடங்கினார். டெல்லியில் இருந்து புறப்பட்டு சென்றார். முதலில், அவர் கானா சென்றடைந்தார்.கானா அதிபர் ஜான் டிரமனி மஹாமா அழைப்பின்பேரில் அவர் சென்றுள்ளார். கோடகா விமான நிலையத்தில் மோடிக்கு இந்தியர்கள் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேலும் பிரதமர் மோடியை அதிபர் ஜான் டிரமனி மஹாமா கைக்குலுக்கி வரவேற்றார். கானாவில் பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் உயரிய விருதான 'ஆபிஸ் ஆப் தி ஆர்டர் ஆப் தி ஸ்டார் ஆப் கானா விருது' அளித்து கவுரவிக்கப்பட்டது. கானா அதிபர் ஜான் தர்மனி மஹாவாவிடம் இருந்து இந்த விருதை பிரதமர் மோடி பெற்றுக்கொண்டார்.



சென்னை, அடையாறு, சாஸ்திரி நகரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 208 நகர்புற நலவாழ்வு மையங்கள் மற்றும் 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகைதந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# மாலியில் இந்தியர்கள் 3 பேர் கடத்தல்: பத்திரமாக மீட்க இந்தியா கோரிக்கை

**புதுடெல்லி, ஜூலை 04-**
மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலியின் கேய்ஸ் பகுதியில் உள்ள ஒரு தொழிற்சாலையிலிருந்து கடத்தப்பட்ட 3 இந்திய தொழிலாளர்களை உடனடியாக மீட்க வேண்டுமென மத்திய வெளியுறவு அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மேற்கு மற்றும் மத்திய மாலியின் பல இடங்களில் ராணுவ தளங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்கள் மீது கடந்த ஜூலை 1 அன்று பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதாக இந்திய அரசுக்குத் தெரிய வந்துள்ளது. அப்போது கேய்ஸில் உள்ள டயமண்ட் சிமென்ட் தொழிற்சாலையில் ஆயுதமேந்திய தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதுடன், இந்தியாவைச் சேர்ந்த 3 தொழிலாளர்களையும் கடத்திச் சென்றனர். இந்திய அரசு இந்த மோசமான வன்முறைச் செயலை சந்தேகத்திற்கு இடமின்றி கண்டிக்கிறது. கடத்தப்பட்ட இந்தியர்களை பாதுகாப்பாகவும், விரைவாகவும் மீட்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க மாலி அரசாங்கத்தை இந்திய அரசு கேட்டுக்கொள்கிறது. அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள், நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர். மேலும், இந்திய நாட்டினரைப் பாதுகாப்பாகவும் விரைவாகவும் விடுவிக்க பல்வேறு மட்டங்களில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர். இதற்காக பமாகோவில் உள்ள இந்தியத் தூதரகம், மாலி அரசாங்கத்தின் அதிகாரிகள் மற்றும் டயமண்ட் சிமென்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் தொடர்பில் உள்ளோம். பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினரிடமும் தொடர்பில் உள்ளோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கெய்ஸில் உள்ள டயமண்ட் சிமென்ட் தொழிற்சாலை மீதான தாக்குதல், அல்கொய்தாவுடன் தொடர்புடைய குழுவான ஜமாத் நுஸ்ரத் அல்-இஸ்லாம் வால்-முஸ்லிமினால் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை (ஜூலை 1) மாலியின் செனகல் எல்லைக்கு அருகிலுள்ள டிபோலி மற்றும் அருகிலுள்ள கெய்ஸ் மற்றும் சாண்டேர் நகரங்களை குறிவைத்து நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்களின் ஒரு பகுதியாக இந்தத் தாக்குதல் நடந்தது. அதே நாளில் மவுரித்தேனியா நாட்டின் எல்லைக்கு அருகில் பமாகோவின் வடமேற்கே உள்ள நியோரோ டு சஹேல், கோகோய் மற்றும் மத்திய மாலியில் உள்ள மொலோடோ, நியோனோ ஆகிய இடங்களிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

## அணையின் நீர்மட்டமும் சரிவு

**சேலம், ஜூலை 04-**
மேட்டூர் அணைக்கு வியாழக்கிழமை மாலை நிலவரப்படி, காவிரி ஆற்றிலிருந்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 18,615 கன அடியாக சரிந்தது அணையின் நீர்வரத்துக் குறைந்து, அதனை விட அதிகளவில் நீர் திறப்பு இருப்பதால், அணையின் நீர்மட்டமும் குறைந்துள்ளது.

சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள மேட்டூர் அணையிலிருந்து நீர் மின் நிலையங்கள் வழியாக, வினாடிக்கு 22,300 கன அடி நீரும், உபரி நீர் போக்கி வழியாக வினாடிக்கு 1,700 கன அடி நீரும் கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 500கன அடி நீரும் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 119.91 அடியிலிருந்து 119.80 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 93.15 டிஎம்சியாக உள்ளது.

# வேலூரில் அ.தி.மு.க. சார்பில் வரும் 8-ம் தேதி ஆர்ப்பாட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



**சென்னை, ஜூலை 04-**
வேலூர் பல்நோக்கு மருத்துவமனையை உடனே திறக்க கோரி 8-ம்தேதி அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

ஒரு வாரத்திற்கு முன்பு (25.6.2025) மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கப்படாத நிலையில்; உள்கட்டமைப்பு முழுமையாக ஏற்படுத்தாத நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின், வேலூரில் 125 ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு கொண்ட பென்லாண்ட் மருத்துவமனைக் கட்டட வளாகத்தில் புதிதாக 7 மாடிக் கட்டடத்தை திறந்தார்.

முதல்வர் திறந்து வைத்த மருத்துவமனை இப்போது மூடப்பட்டது ஏன்? ஏழை, எளிய, நடுத்தர மக்களின் நலனுக்காக செயல்பட வேண்டிய அரசு மருத்துவமனையை, விளையாட்டுப் பிள்ளைகளின் மைதானம் போல் நினைத்து இந்த அரசு நடந்து கொண்டது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

ஆட்சியின் அலட்சிய போக்கைக் கண்டித்தும்; பல கோடி செலவில் கட்டப்பட்ட சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை அனைத்து வசதிகளோடு மீண்டும் முறையாக திறந்து செயல்படுத்தவும் வலியுறுத்தி, அ.தி.மு.க. வேலூர் மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில், 8.7.2025, செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில், வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முக்கூர் சுப்பிரமணியன் தலைமையிலும்; வேலூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் அப்பு முன்னிலையிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### விரைவில் கையெழுத்தாகிறது

# இந்தியா – அமெரிக்கா இடையே பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தம்

**புதுடெல்லி, ஜூலை 04-**
இந்தியா - அமெரிக்கா இடையே 10 ஆண்டு பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகிறது.

இந்த ஆண்டு இறுதிக்குள் 10 ஆண்டுகளுக்கான பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியாவும், அமெரிக்காவும் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க மூத்த பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் கர்னல் கிறிஸ் டெவின் தெரிவித்துள்ளார். அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "செவ்வாயன்று (ஜூலை 1) நடைபெற்ற ஒரு தொலைபேசி உரையாடலின் போது, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்தும், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் இந்த ஆண்டு இறுதியில் சந்திக்கும் போது புதிய கட்டமைப்பை இறுதி செய்து கையெழுத்திட ஒப்புக்கொண்டனர்.

பிப்ரவரி 2025-ல் அதிபர் ட்ரம்ப் மற்றும் பிரதமர் மோடியின் கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு இலக்குகளை அடைவதில் இரு நாடுகளும் அடைந்துள்ள கணிசமான முன்னேற்றத்தை பாதுகாப்பு அமைச்சர் ஹெக்செத் மற்றும் அமைச்சர் சிங் ஆகியோர் ஆய்வு செய்தனர். இந்தியாவுக்கு வழங்குவதாக அமெரிக்கா ஒப்புக்கொண்ட முக்கிய பாதுகாப்பு தளவாடங்கள் குறித்தும், இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான பாதுகாப்பு தொழில் துறை ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் இருவரும் விவாதித்தனர்" என்று பென்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இது குறித்து அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத், "ஜூலை 1 ஆம் தேதி, பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் பேசினார்.

தெற்காசியாவில் அமெரிக்காவின் முக்கிய பாதுகாப்பு பங்காளியாக இந்தியா திகழ்வதாகவும், எனவே, அமெரிக்கா இந்தியாவுக்கு முன்னுரிமையை அளிக்கிறது. என்று தெரிவித்தார்.

முன்னதாக, ஜூலை 1-ம் தேதி ராஜ்நாத் சிங் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்துடன் பேசியதில் மகிழ்ச்சி. இந்திய-அமெரிக்க பாதுகாப்பு கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்தவும், திறன் மேம்பாட்டில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், புதிய முயற்சிகளை மதிப்பாய்வு செய்யவுமான இந்த உரையாடல் சிறப்பாக இருந்தது. பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்கா இந்தியாவுக்கு அளித்த அசைக்க முடியாத ஆதரவுக்கு எனது ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விரைவில் அவரைச் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்." என்று தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

**04-07-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம் -** பணவரவால் மனம் பரவசப்படும் நாள். ஆடை ஆபரணங்கள், அலங்காரப் பொருட்கள் சேரும். காதல் ஈடுபாட்டால் கவலைகளை மறந்து களிப்படைவீர்கள். அரசாங்க உதவிகள் தடையின்றி கிடைக்கும்.

**ரிஷபம் –** தனவரவு கூடும். எதிரிகள் பணிவர். எதிர்ப்புகள் குறையும். நண்பர்கள் உதவி நன்மை பயக்கும். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும். பெயரும் புகழும் ஓங்கும். புதிய பெண் சினேகம் புத்துணர்வு தரும்.

**மிதுனம் –** பயணங்களில் கவனம் தேவை. குழந்தைகளுக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படும். எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் உங்கள் திறமை பாராட்டுப் பெறாது. கல்வியில் வெற்றிகள் குவிப்பார்கள்.

**கடகம் –** தாயின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சியைக் கைவிடாது, முன்னேற முயலுங்கள். வெற்றி உங்கள் பக்கம். வாகன சுகம் குறையும்.

**சிம்மம் –** மனதில் தைரியமும், புதிய தகவல்கள் மூலம் புதிய உற்சாகம் பிறக்கும். மனையாளின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். முகநூல் மூலம் நட்பு வட்டம் விரிவடையும். நண்பர்கள் உதவி நன்மை பயக்கும்.

**கன்னி –** இன்று உங்களுக்கு சுமாரான நாள். சுக சௌக்கியத்திற்கு பங்கம் விளையும். எதிர்பார்த்த இனங்களில் பணவரவு தாமதப்படும். எதையும் சாதிக்கும் திறமை பெறுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**துலாம் –** தனவரவு தாராளமாக இருக்கும். ஆரோக்கியம் மேம்படும். நினைத்த காரியங்கள் நினைத்தது போல் நடக்கும். வாக்குவன்மையால் பொருளாதார நிலை மேம்படும். ஆராய்ச்சியாளர்களுக்கு அருமையான நாள்.

**விருச்சிகம் –** தொழில் புரிவோருக்கு வீண் செலவுகள், பணமுடையும் தவிர்க்க முடியாதது. உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். நேர் வழியில் பணம் செலவு செய்தால் நிம்மதி பிறக்கும்.

**தனுசு –** தொழில் மற்றும் வியாபாரம் சம்பந்தமாக பெரியவர்கள் சந்திப்பு இனிதாக அமையும். எண்ணியபடி எண்ணிய காரியங்கள் ஏற்றம் தரும். பெண்களால் நன்மை உண்டாகும். ஸ்த்ரீ போக விருத்தி உண்டு.

**மகரம் –** புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு, பணப்பயன் உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**கும்பம் –** இரவும் பகலும் போல் இன்பமும் துன்பமும் மாறி வரும் நாள். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். தெய்வ நம்பிக்கையால் தேகத்தில் புது தெம்பு ஏற்படும். உல்லாசப் பயணங்கள் உற்சாகம் தரும்.

**மீனம் –** எந்த விஷயத்திலும் நியாயமாக நடக்க வேண்டிய நாள். அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மனைவியின் கலகத்தால், மற்றவர்கள் பகை ஏற்படும். அக்கம் பக்கத்தினருடன் அன்பாகப் பழகவும்.

# எல்லைதாண்டி மீன் பிடித்தால் கைது: இலங்கை அமைச்சர் திட்டவட்டம்

**கொழும்பு, ஜூலை 04-**
தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி மீன் பிடித்தால் உடனே கைது செய்யப்படுவார்கள் என்று இலங்கை அமைச்சர் தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படத்தியுள்ளது.

எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கூறி படகுகளுடன் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்யும் சம்பவம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த பிரச்சனை தொடர்பாக இலங்கை மீன் வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் கூறுகையில்:-

இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடிக்கும் முறைகளை பின்பற்றுகின்றனர்.

இதனால் கடல்வளம் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, இலங்கையின் வடக்கு பகுதியில் வாழும் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக உள்ளது. இலங்கைக் கடல் எல்லையில் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கும் சம்பவங்கள் கடந்த இரண்டு மாதங்களாக குறைந்திருந்த நிலையில், தற்போது மீண்டும் அதிகரித்து வருகிறது. எல்லைதாண்டி மீன் பிடித்தால் கைது மற்றும் படகு பறிமுதல் நடவடிக்கை தொடரும். மீனவர்கள் மற்றும் படகுகள் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த பிரச்சனையை தூதரக ரீதியாக இந்தியாவிடம் கொண்டு செல்வதோடு, சட்டவிரோதமாக மீன்பிடிக்கும் மீனவர்களை கைது செய்ய இலங்கை அரசு, இலங்கை கடற்படைக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கியுள்ளது என்று தெரிவித்தார்.

# ஏறுமுகத்தில் தங்கம் விலை

**சென்னை, ஜூலை 04-**
சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஜூலை 3) பவுனுக்கு ரூ.320 உயர்ந்து விற்பனையானது. தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருவது நகை வாங்குவோர் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.கடந்த நான்கு நாட்களில் தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,520 அதிகரித்துள்ளது. சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு அடிப்படையில் இந்தியாவில் தங்கம் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அதோடு உலக நாடுகளின் வர்த்தக ரீதியான செயல்பாடும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதன்படி, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

அந்தவகையில், சென்னையில், தங்கம் விலை நேற்று (வியாழக்கிழமை) கிராமுக்கு ரூ.40 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9,105-க்கு விற்பனையானது. பவுனுக்கு ரூ.320 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.72,840-க்கு விற்பனையானது. நேற்று வெள்ளி விலை ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.121-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 21 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

கடந்த 4 நாட்களில் தங்கம் விலை நிலவரம் வருமாறு., 03.07.2025 - ஒரு பவுன் ரூ. 72,840, 02.07.2025 - ஒரு பவுன் ரூ. 72,520, 01.07.2025 - ஒரு பவுன் ரூ. 72,160, 30.06.2025- ஒரு பவுன் ரூ. 71,320, இவ்வாறாக கடந்த நான்கு நாட்களில் தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,520 அதிகரித்துள்ளது.

# அமெரிக்காவுக்கு சென்ற ஏர் இந்தியா விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு

## வியன்னாவில் தரையிறங்கியது

**புதுடெல்லி, ஜூலை 04-**
டெல்லியில் இருந்து அமெரிக்காவின் வாஷிங்டன் நகருக்கு நேற்று முன்தினம் ஏர் இந்தியா விமானம் புறப்படு சென்றது. இந்த விமானம் வழக்கமாக ஆஸ்திரியாவின் வியன்னாவில் எரிபொருள் நிரப்ப தரையிறக்கப்படும். அந்த வகையில், வியன்னா விமானநிலையத்தில் ஏர் இந்தியா விமானம் தரையிறக்கப்பட்டு, எரிபொருள் நிரப்பப்பட்டது. அப்போது விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து விமானத்தில் தொழில்நுட்ப கோளாறை சரி செய்யும் பணியில் தொழில்நுட்ப நிபுணர்கள் ஈடுபட்டனர். ஆனால் சரி செய்யும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

இதனால், விமானம் அங்கேயே நிறுத்தி வைக்கப்பட்டது. விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் வியன்னாவில் இறக்கிவிடப்பட்டனர். விமான சேவை ரத்து செய்யப்படுவதாக ஏர் இந்தியா விமான நிர்வாகம் அறிவித்தது. நடு வழியில் பயணிகள் அனைவரும் இறக்கிவிடப்பட்டதால் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். சில மணி நேரம் கழித்து, பயணிகள் அனைவருக்கும் மாற்று விமானம் ஏற்பாடு செய்யப்பட்டு அதில் அனுப்பி வைக்கப்பட்டனர். பயணத்தை தொடர விரும்பாத பயணிகளுக்கு முழுக் கட்டணமும் திருப்பி அளிக்கப்பட்டது.

# இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் 82 பேர் பலி

**ஜெருசலேம், ஜூலை 04-**
காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 82 பேர் உயிரிழந்துள்ளனர்.

காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் பாலஸ்தீனர்கள் 82 பேர் உயிரிழந்துள்ளனர். இதனை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அவர் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு மீதான, 60 நாள் போர் நிறுத்த நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளதாக கூறியிருந்தார். எனினும் இந்த நிபந்தனைகளை ஹமாஸ் அமைப்பினர் ஒப்புக்கொள்ளவில்லை.

அதே நேரம், போரை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியை ஏற்றுக் கொள்ள தயாராக உள்ளோம் என ஹமாஸ் அமைப்பு கூறி இருந்தது. இந்நிலையில் காசாவில் பல்வேறு இடங்களில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.

அதிபர் டிரம்பின் கோரிக்கையை கருத்தில் கொள்ளாமல், காசாவில் பல்வேறு இடங்களில் இஸ்ரேல் படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் பாலஸ்தீனர்கள் 82 பேர் உயிரிழந்தனர். தொடர்ந்து இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தி வருவதால் பதற்றமான சூழல் நிலவுகிறது.

# அடுத்த புத்த மதத்தலைவரை சீனா தீர்மானிக்க முடியாது: இந்தியா பதிலடி

**புதுடெல்லி, ஜூலை 04-**

"அடுத்த தலாய் லாமா குறித்த முடிவை எடுக்கும் உரிமை என்பது தற்போதைய புத்த மதத் தலைவரான தலாய் லாமா மற்றும் தலாய் லாமாவின் 'காடன் போட்ராங் அறக்கட்டளை' தவிர்த்து வேறு யாருக்கும் இல்லை" என்று சீனாவுக்கு இந்தியா பதிலடி கொடுத்துள்ளது.

இது குறித்து சிறுபான்மை விவகார அமைச்சர் கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் கூறும்போது, "அடுத்த தலாய் லாமா யார் என்பதை முடிவு செய்யும் விவகாரத்தைப் பொறுத்தவரை, அதற்காக நிறுவப்பட்டுள்ள அமைப்பு மற்றும் தலாய் லாமாவின் விருப்பம் ஆகியவற்றின் படியே தீர்மானிக்கப்பட வேண்டும் என்றே தலாய் லாமாவைப் பின்பற்றும் அனைவரும் நினைக்கிறார்கள்.

தலாய் லாமாவையும், நடைமுறையில் உள்ள மரபுகளையும் தவிர வேறு யாருக்கும் அதைத் தீர்மானிக்கும் உரிமை இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

புதிய தலாய் லாமாவை தேர்வு செய்வதில் சீன அரசு முனைப்பு காட்டி வருகிறது. இது குறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் கூறும்போது, "தலாய் லாமா உள்ளிட்ட பவுத்த தலைவர்களை தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளுக்கு சீன அரசின் ஒப்புதலும் அங்கீகாரமும் அவசியம். அதற்கான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்தப் பின்னணியில் தான், 14-வது தலாய் லாமாவின் 'வாரிசு' குறித்த அறிவிப்புக்கு ஆதரவாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சரும், பவுத்தருமான கிரண் ரிஜிஜு கருத்து தெரிவித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

# தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம் கொள்கை விளக்க பொதுக்கூட்டங்கள்

## த.வெ.க. நிர்வாகிகள் ஏற்பாடு

**சென்னை, ஜூலை 04-**

த.வெ.க. கொள்கைகளை மற்றும் மக்கள் நலத் திட்டங்களை பொதுமக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்காக தமிழகம் முழுவதும் 10 ஆயிரம் கிராமங்களில் கொள்கை விளக்க பொதுக்கூட்டம் த.வெ.க. சார்பில் நடைபெற இருக்கிறது.

த.வெ.க.வில் கட்சி ரீதியாக பிரிக்கப்பட்டுள்ள 100-க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் 10 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு மண்டல வாரியாக நகரங்களில், கிராமங்களில் என முக்கிய இடங்களில் பொதுக்கூட்டம், தெருமுனை பிரசார கூட்டங்கள் நடத்தி அதன் வாயிலாக த.வெ.க. திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல த.வெ.க. தலைவர் விஜய் திட்டமிட்டுள்ளார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை விஜய் உத்தரவின் பேரில் கட்சி பொதுச்செயலாளர் என்.ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் செய்து வருகின்றனர். கூட்டத்தில் 2026 தேர்தலில் த.வெ.க.வின் கொள்கைகள், மக்கள் பணியில் கட்சியின் முழு ஈடுபாடு, மற்ற அரசியல் கட்சிகளில் இருந்து வேறுபட்டு த.வெ.க. செயல்படுவது, ஆளுங்கட்சியினரின் குறைபாடுகளை மக்களுக்கு எடுத்து சொல்லி ஆதரவு பெறுவது, தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு விஜயின் தனது தொலை நோக்குத் திட்டங்கள் குறித்து விளக்குகிறார்கள். த.வெ.க.வை பொறுத்தவரை 2026 தேர்தலுக்கான முதற்கட்ட பிரசார மேடையாக இந்த பொதுக்கூட்டங்கள் அமைய இருக்கிறது. தமிழகம் முழுவதும் நடைபெற இருக்கும் இந்த பொதுக்கூட்டங்கள் த.வெ.க.வின் தேர்தல் களத்துக்கு அடித்தளமாக இருக்கும்.

இந்நிலையில் த.வெ.க. செயற்குழு கூட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) சென்னை பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் விஜய் தலைமையில் நடைபெற இருக்கிறது. கூட்டத்தில் 1000-க்கும் மேற்பட்ட செயற்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள் பங்கேற்க இருக்கின்றனர். மேலும் 2026 தேர்தல் திட்டங்கள், சுற்றுப் பயணம், மக்கள் நல பணிகள் மற்றும் அடிப்படை பிரச்சினைகள், தொகுதி பிரச்சனைகள் குறித்த பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட இருக்கிறது. தொடர்ந்து கூட்டத்தில் விஜய் அதிரடி அரசியல் பேசுவார் என்பதால் கூட்டத்திற்கு நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டு உள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான தேர்வின் மூலம் உதவிப்பொறியாளர் பதவிக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு, நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 169 உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

# அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் கவர்னர் ஆர்.என்.ரவி சந்திப்பு

**புதுடெல்லி, ஜூலை 04-**



டெல்லியில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை தமிழக கவர்னர் ஆர்.என். ரவி சந்தித்துப் பேசினார்.

தமிழக அரசுக்கும் கவர்னருக்கும் இடையே தொடர்ந்து மோதல் போக்கு நிலவி வருகிறது. இந்நிலையில் கடந்த மாதம் இறுதியில் டெல்லி சென்ற கவர்னர் தற்போது மீண்டும் டெல்லி புறப்பட்டுச் சென்றுள்ளார். நேற்று அமைச்சர் ராஜ்நாத் சிங்கைச் சந்தித்த கவர்னர் ரவி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்டோரையும் சந்திக்க விருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் இதுதொடர்பாக கவர்னர் ரவி, எக்ஸ் சமூக வலைதளத்தில், தொலைநோக்குப் பார்வையும் துடிப்புமிக்க பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கைச் சந்தித்ததில் மகிழ்ச்சி.

நாட்டில் பல்வேறு பிரச்னைகள் குறித்த அமைச்சரின் கருத்துக்கள் மற்றும் அனுபவத்தைப் பெற்றதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

# பெண் எஸ்.எஸ்.ஐ. உயிரிழப்பு: நாமக்கல் எஸ்.பி. விளக்கம்

**ராசிபுரம், ஜூலை 04-**

பணிச் சுமை காரணமாக பெண் சிறப்பு உதவி ஆய்வாளர் உயிரிழந்தாக சமூக வலைதளத்தில் பரவிய தகவலை நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ராஜேஷ்கண்ணன் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக காவல் கண்காணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ராசிபுரம் அருகே பேளுக்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகக் காமாட்சி (48) என்பவர் பணிபுரிந்து வந்தார். இவர் பணி நேரம் முடிந்து நேற்று முன்தினம் (2-ம் தேதி) அதிகாலை காவல் நிலையத்துக்கு வந்து முதல் மாடியில் உள்ள ஓய்வறையில் ஓய்வு எடுத்துள்ளார்.

நேற்று காலை 11.30 மணி வரை ஓய்வு நேரம் முடிந்தும் அவர் பணிக்கு வரவில்லை. இதையடுத்து, ஓய்வறைக்குச் சென்று பார்த்தபோது, அவர் உயிரிழந்தது தெரியவந்தது. தொடர்ந்து அவரது உடல் பிரேதப் பரிசோதனைக்காக நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

உயிரிழந்த காமாட்சிக்குக் கடந்த 3 மாதங்களில் 40 நாட்கள் மருத்துவ விடுப்பும், 2 நாட்கள் சாதாரண விடுப்பும், 3 நாள் அனுமதி விடுப்பு, ஒரு நாள் திருமண நாள் சிறப்பு விடுப்பும் வழங்கப்பட்டுள்ளன.

இதனிடையே, சில சமூக வலைதளங்களில் பெண் சிறப்பு காவல் உதவியாளர் காமாட்சிக்கு விடுப்பு வழங்காததால் பணிச் சுமை அதிகரித்து, உடல் நிலை சரியில்லாமல் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. இது உண்மைக்கு மாறானது. அவரது உயிரிழப்பு குறித்து விசாரணை முடிவில் முழு விவரம் தெரியவரும் என்று தெரிவித்துள்ளார்.

# கடைமடை பகுதிகளுக்கும் தண்ணீர் சென்றடைய நடவடிக்கை தேவை

## எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

**சென்னை, ஜூலை 04-**

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து 20 நாட்களுக்குப் பிறகும் கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் சென்றடையாத நிலையை ஏற்படுத்திய தி.மு.க. அரசுக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்



இது குறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஒவ்வொரு ஆண்டும் டெல்டா பகுதிகளில் உள்ள பாசனக் கால்வாய்கள் முறையாக தூர் வாரப்பட்டு, ஜூன் மாதம் 12-ஆம் தேதியன்று, மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் திறக்கப்படும் தண்ணீர் குறித்த காலத்தில் கடைமடை பகுதிகளைச் சென்றடையும்.

இந்த ஆண்டு காவிரி படுகைகளில் எந்தவித தூர்வாரும் பணிகளையும் செய்யாமல், முதல்வர் ஸ்டாலின் ஜூன் 12–ந் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட்டார். மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்டு 20 நாட்கள் முடிவடைந்த நிலையில், இன்னும் டெல்டா மாவட்ட கடைமடை பகுதிகளுக்குக் காவிரி தண்ணீர் சென்றடையாமல், கடைமடை விவசாயிகள் நடவுப் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடல் முகத்துவாரங்களில் வெங்காயத் தாமரை புதராக மண்டிக் கிடப்பதால் விவசாயிகள் கடும் அவதி அடைந்துள்ளனர். ஆசிய வளர்ச்சி வங்கி, கடல் முகத்துவார சீரமைப்புக்காக வழங்கும் நிதியைப் பெற நிர்வாகத் திறனற்ற தி.மு.க. ஆட்சியாளர்கள் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்று விவசாய அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. டெல்டா மாவட்டங்களில் உள்ள அனைத்து கடைமடை பகுதிகளுக்கும் உடனடியாக தடையில்லாமல் தண்ணீர் சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அரசை வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க., அ.தி.மு.க.வுடன் கூட்டணி பேச்சு: வதந்தி என்கிறார் ராமதாஸ்

**விழுப்புரம், ஜூலை 04-**

தி.மு.க.மற்றும் அ.தி.மு.க.வுடன் பா.ம.க. கூட்டணி பேசி வருவதாக கூறப்படும் தகவல்கள் அனைத்தும் வதந்தி தான் என அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் தைலாபுரம் தோட்டத்தில் நேற்று (வியாழக்கிழமை) செய்தியாளர்களை சந்தித்த ராமதாஸ், "நகை திருட்டு புகாரில் உயிரிழந்த அஜித்குமார் குடும்பத்துக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் குடும்பத்துக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்கவேண்டும்.

அஜித்குமார் மீது புகாரளித்த நிகிதாவின் ஒரு போன் காலுக்கு இவ்வளவு செல்வாக்கு வந்தது எப்படி?. இதன் பின்னணியில் உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பா.ம.க.வில் இருந்து சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அருளை நீக்க அன்புமணிக்கு அதிகாரம் இல்லை. பா.ம.க.வில் நிர்வாகிகளை நீக்கும் அதிகாரம் எனக்கு மட்டுமே உள்ளது. ஜி.கே.மணி மூலம் சபாநாயகருக்கு கடிதம் கொடுத்து தான் அருளை பதவியிலிருந்து நீக்க முடியும். முதலில் நான் இதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். எனவே அருளை நீக்கும் அதிகாரம் எனக்கு மட்டுமே உண்டு.

இப்போது என் மனம் வேதனைப்படும் அளவு நடக்கின்றனர், எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு கட்சியை நடத்தி வருகிறேன். கட்சியை தொடர்ந்து நானே வழிநடத்துவேன். தி.மு.க.மற்றும் அ.தி.மு.க.வுடன் பா.ம.க. கூட்டணி பேசி வருவதாக கூறப்படும் தகவல்கள் அனைத்தும் வதந்தி தான். செயற்குழு, பொதுக்குழு, நிர்வாகக் குழுவை கூட்டி எந்த கட்சியுடன் கூட்டணி வைக்க வேண்டும் என்பது குறித்து முடிவு செய்யப்படும். ஆகஸ்டு 10-ம் தேதி பூம்புகாரில் மகளிர் மாநாடு நடத்தவுள்ளோம். ஜூலை 10-ம் தேதி மாநாடு நடக்கும் இடத்தை பார்வையிட செல்கிறேன். இது ஒட்டுமொத்த மகளிர் மாநாடு, எனவே அனைத்துக்கட்சியை சேர்ந்த மகளிரும் பங்கேற்கலாம். அன்புமணி தொடர்பான கேள்விகளை என்னிடம் தவிர்க்க வேண்டுகிறேன்" எனத் தெரிவித்தார்

# காவலாளி அஜித்குமார் வழக்கு:

# வீடியோ எடுத்தவருக்கு போலீஸ் பாதுகாப்பு

**திருப்புவனம்,ஜூலை 04-**

சிவகங்கையில் போலீசார் தாக்கியதில் அஜித்குமார் என்ற இளைஞர் உயிரிழந்த வழக்கில், முக்கிய சாட்சியான சக்தீஸ்வரனுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

திருப்புவனத்தில், நகைகள் திருடுபோன புகாரின் பேரில் அஜித்குமார் என்ற வாலிபர் காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது போலீசார் தாக்கியதில் அவர் உயிரிழந்த விவகாரம், தமிழக அரசுக்கு பெரும் தலைவலியாக மாறியது. இதையடுத்து, சிவகங்கை போலீஸ் எஸ்.பி.,யை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றியும், மானாமதுரை டி.எஸ்.பி.,யை சஸ்பெண்ட் செய்தும், குற்றம் சாட்டப்பட்ட போலீசாரை கைது செய்தும், அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வழக்கும் சி.பி.ஐ., விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனிடையே, அஜித்குமாரை போலீசார் தாக்கிய வீடியோ வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கோவில் பணியாளரான சக்தீஸ்வரன், அஜித்குமாரை காவலர்கள் தாக்கிய வீடியோவை நீதிமன்றத்தில் ஆதாரமாக பதிவு செய்தார். இது வழக்கின் விசாரணைக்கு முக்கிய சாட்சியமாக பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், அஜித்குமாரை போலீசார் தாக்கிய வீடியோ எடுத்த சக்தீஸ்வரன் தனக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி டி.ஜி.பி.,க்கு இமெயில் மூலம் கடிதம் எழுதியுள்ளார். ரவுடிகளுடன் தொடர்பிலுள்ள காவலர்கள், தன்னை மிரட்டிய நிலையில் தனக்கு பாதுகாப்பு வேண்டும் என்று தமிழக டி.ஜி.பி., சங்கர் ஜிவாலுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், சக்தீஸ்வரனுக்கு 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு அளிக்க உத்தரவிடப்பட்டு உள்ளது. சுழற்சி முறையில் 2 போலீசார், பாதுகாப்பு பணியில் நியமிக்கப்பட்டு உள்ளனர். 24 மணி நேர பாதுகாப்பு பணி என உத்தரவிடப்பட்டுள்ளது. ஒரு ஆயுதப்படை போலீசார், ஒரு உள்ளூர் போலீசார் பணியில் உள்ளனர். மடப்புரம் கோவில் உதவி கமிஷனர் அலுவலகத்திலும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# விவசாயிகள் தற்கொலை: மத்திய அரசுக்கு ராகுல் காந்தி கண்டனம்

**புதுடெல்லி, ஜூலை 04-**

மகாராஷ்டிராவில் 3 மாதங்களில் 767 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதை சுட்டிக்காட்டி, "விவசாயிகள் கடனில் மூழ்குகிறார்கள் ஆனால், அரசோ அலட்சியமாக இருக்கிறது" என ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிராவில் கடந்த ஜனவரி முதல் மார்ச் வரையிலான 3 மாத காலத்தில் 767 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதை மாநில சட்டப்பேரவையில் அரசு தெரிவித்ததாக ஆங்கில நாளிதழ் ஒன்று தலையங்கம் வெளியிட்டது. இதை சுட்டிக்காட்டி ராகுல் காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், வெறும் 3 மாதங்களில், மகாராஷ்டிராவில் 767 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். உண்மை என்னவென்றால், 767 குடும்பங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அந்த 767 குடும்பங்களால் இனி ஒருபோதும் மீள முடியாது. ஆனால், அரசாங்கம் அமைதியாக இருக்கிறது. அது அலட்சியமாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

விவசாயிகள் ஒவ்வொரு நாளும் கடனில் மூழ்குகிறார்கள். ஆனால், குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அவர்கள் கடன் தள்ளுபடி கோரும்போது, அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆனால் கோடிக்கணக்கில் பணம் வைத்திருப்பவர்கள்? மோடி அரசாங்கம் அவர்களின் கடன்களை எளிதில் தள்ளுபடி செய்கிறது.

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என்று மோடி கூறியிருந்தார். ஆனால், நமக்கெல்லாம் உணவு அளிக்கும் விவசாயிகளின் வாழும் காலம் பாதியாகக் குறைக்கப்படும் அளவுக்கே தற்பேது நிலைமை உள்ளது. இந்த அரசு, விவசாயிகளைக் கொன்று வருகிறது - அமைதியாக, ஆனால் தொடர்ந்து. அதேநேரத்தில், பிரதமர் மோடி, தனது சொந்த மக்கள் தொடர்பு காட்சிகளை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறார்." என்று குற்றம் சாட்டியுள்ளார்.

# கொரோனாவுக்கு ஒருவர் பலி

**புனே, ஜூலை 04-**

மகாராஷ்டிராவில் கொரோனா தொற்றுக்கு ஒருவர் பலியாகியுள்ளார்.

நாட்டில் கடந்த 2019-ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் கொரோனா வைரஸ் பெருந்தொற்று உறுதியானது. தொடர்ந்து நாடு முழுவதும் பரவல் அதிகரித்தது. பின்பு, கொரோனா தடுப்பூசி போடப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்நிலையில், நாட்டில் மீண்டும் புதிதாக கொரோனா தொற்று பரவி வருகிறது. எனினும், அதனால் பெரிய அளவில் பாதிப்பு இருக்காது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த சூழலில், மகாராஷ்டிராவில் புதிதாக 14 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது. இவர்களில் 4 பேர் மும்பையை சேர்ந்தவர்கள் ஆவர். இதுதவிர தானே (1), புனே (1), புனே மாநகராட்சி பகுதி (7) மற்றும் நாக்பூர் (1) ஆகிய பகுதிகளில் பதிவாகி உள்ளன. இதனால், இந்த ஆண்டில் மொத்த பாதிப்பு எண்ணிக்கை 2,547 ஆக அதிகரித்து உள்ளது என சுகாதார துறை தெரிவித்து உள்ளது. இதேபோன்று, நாக்பூரை சேர்ந்த ஒருவர் தொற்றால் பலியாகி உள்ளார் என உறுதியாகி உள்ளது.

# அஜித்குமார் குடும்பத்துக்கு பாதுகாப்பு அளிக்க திருமாவளவன் வலியுறுத்தல்

**சென்னை, ஜூலை 04-**

போலீஸ் விசாரணையில் உயிரிழந்த மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் குடும்பத்துக்கு மிரட்டல் உள்ளதால், பாதுகாப்பு வழங்க வேண்டும், ''என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் திருமாவளவன் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:-

மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் படுகொலை வழக்கு மிகவும் உணர்ச்சிப்பூர்வமான வழக்காகவும், தேசிய அளவில் கவனத்தை ஈர்க்கும் வழக்காக மாறி உள்ளது. இந்த வழக்கில் தொடர்புடையவர்கள், சாட்சிகளாக இருப்பவர்கள் அஞ்சும் நிலை ஏற்பட்டு உள்ளது.

நான் சென்ற போது கூட இந்த தகவலை என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள். அஜித்குமார் குடும்பத்துக்கே அச்சுறுத்தல் உள்ளது. பாதுகாப்பு வேண்டும் என அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். அவரின் குடும்பத்துக்கு ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

அஜித்குமார் மீது புகார் அளித்த நிகிதா டாக்டர் அல்ல. பி.எச்.டி. முடித்தவர் என தெரிகிறது. அவர் குடும்பத்தினர் மீது பண மோசடி வழக்கு உள்ளதாக ஊடகங்களில் செய்திவருகிறது. அவரின் நடவடிக்கை குறித்து புகார் பெற்று உரிய விசாரணை நடத்த வேண்டிய நிலை உள்ளது. அவர் கோவிலுக்கு அந்த நகையை கொண்டு வந்தாரா என்ற சந்தேகமும் எழுப்பப்படுகிறது. ஆகவே, அந்த பின்னணியை கண்டறிய வேண்டியது இந்த வழக்குக்கும் அவசியமானதாக தெரிகிறது. அவருக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு உள்ளதாக சொல்லப்படுகிறது. இதனை நீதிமன்றத்தில் அரசு மறுத்துள்ளது. நிகிதாவை சுற்றி, இதுபோன்ற கேள்விகள் எழுந்துள்ள நிலையில், தனி வழக்காக பதிவு செய்து அவரிடம் விசாரிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# பணமோசடி புகார்:

# நிகிதா மீதான வழக்குகளை உடனே விசாரிக்க கோரி மனு

**மதுரை, ஜூலை 04-**

திருப்புவனம் இளைஞர் அஜீத்குமார் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு மூல காரணமாக இருந்த நிகிதா மீதான வழக்குகளை உடனடியாக விசாரிக்க கோரி திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.




மதுரை மாவட்டம் திருமங்கலம் ஆலம்பட்டி பகுதியை சேர்ந்த ஜெயபெருமாள், அவரது மனைவி சிவகாமி அம்மாள், இவர்களது மகள் நிகிதா உள்ளிட்டோர் தங்களுக்கு முக்கிய பிரமுகரின் உதவியாளரை தெரியும் என்றும், அவர் மூலமாக அரசு வேலை வாங்கித் தருவதாக கடந்த 2010-ம் ஆண்டு கூறியுள்ளனர். இதனை நம்பி சிலர், அரசு வேலை ஆசையில் ரூ.16 லட்சம் வரை இவர்களிடம் கொடுத்ததாகவும், ஆனால், வேலை வாங்கி தராமல் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அப்போது திருமங்கலம் தாலுகா போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் சிவகாமி அம்மாள் மற்றும் அவரது மகள் நிகிதா உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்து திருமங்கலம் தாலுகா போலீசார் விசாரித்துள்ளனர்.

செக்கானூரணி அருகே தேங்கல்பட்டியை சேர்ந்தவருக்கும் அரசு கல்லூரியில் பேராசிரியர் பணி வாங்கி தருவதாக ரூ.25 லட்சம் வாங்கி மோசடி செய்ததாக அளித்த புகாரின்பேரில், பல ஆண்டுகளுக்கு முன்பு போலீசார் வழக்குப்பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது.

மடப்புரம் கோவில் காவலாளி நகை திருடியதாக புகார் கூறிய நிகிதா மீதான வழக்குகளை உடனடியாக விசாரிக்கக் கோரி திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருப்புவனம் காவல் நிலைய மரண வழக்கில் நிகிதாவின் தொடர்பு பல்வேறு கோணங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் தொடர்புடைய அனைத்து நபர்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



ரியல் எஸ்டேட் என்ற பெயரில், விளை நிலங்களுக்கு மத்தியில் வீட்டுமனைப் பிரிவுகளை கட்டமைக்கும் வேலைகள் தொடங்க பட்டிருப்பது ஆபத்தான போக்கு. இதை இனிமேலும் தொடரவிடுவது நாட்டுக்கும், விவசாயத்துக்கும் நல்லதல்ல. போர்க்கால அடிப்படையில் விரைந்து தீர்வு காண முதல்வர் முன்வர வேண்டும்.

- ராமதாஸ்



பாகிஸ்தான் பயங்கரவாதிகளை பாதுகாக்கும் நாடு. அத்தகைய நாட்டிற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலுக்கு தலைமை தாங்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது என்பது தீவிரமான விஷயம். இது இந்தியாவின் ராஜதந்திரத்திற்கு பின்னடைவு. இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி தோல்வி அடைந்துள்ளார்.

- ரன்தீப்சிங்



காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்கான அடிப்படை பணிகளை தொடங்கிவிட்டதாக கர்நாடக அரசு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. காவிரி டெல்டா பகுதிகளை பாலைவனமாக்கும் கர்நாடக அரசின் முயற்சியை சட்டரீதியாக எதிர்கொண்டு முறியடிப்பதோடு, அரசியல் ரீதியாகவும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

- டி.டி.வி. தினகரன்



2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் மற்ற கட்சிகள் என்ன நிலைப்பாடு எடுக்கிறதோ அதை பொறுத்து தான் எங்களின் (தி.மு.க., கூட்டணி) வெற்றி அமையும். நடிகர் விஜயின் திட்டம் என்ன என்பதும் இதில் அடங்கும். அவருக்கு கூடும் கூட்டம், தேர்தலில் ஓட்டுக்களாக மாறுமா? இல்லையா? என்பது யாருக்கும் தெரியாது.

- சண்முகம்

# தஞ்சாவூர் மாவட்டத்தில் நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்

## முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்



**தஞ்சாவூர்,ஜூலை.04-**

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தஞ்சாவூரில் ஸ்ரீஹரி நகரில் புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைத்ததைத் தொடர்ந்து, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன், கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி ஆகியோர் (03.07.2025) திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்ததைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாநகராட்சியில் ஸ்ரீஹரி நகரில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மாநகர நலவாழ்வு மையமும், டவுன் கரம்பையில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மாநகர நலவாழ்வு மையமும், கும்பகோணம் மாநகராட்சியில் பாத்திமாபுரத்தில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மாநகர நலவாழ்வு மையமும், தாராசுரத்தில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மாநகர நலவாழ்வு மையமும், கோட்டையூரில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மாநகர நலவாழ்வு மையமும் மற்றும் கும்பகோணம் திப்பிராஜபுரத்தில் ரூபாய் 1.20 கோடி மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் என மொத்தம் தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூபாய் 2.45 கோடி மதிப்பீட்டில் புதிய சுகாதார நிலைய கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் க.கண்ணன், இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.கலைவாணி, மாநகர நல அலுவலர் மரு.நமச்சிவாயம் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 103 தொழிலாளர்களுக்கு ரூ.4.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

## பயனடைந்தோர் நிறைந்தது மனம் நிகழ்வில் முதல்வருக்கு நன்றி

**நாமக்கல்,ஜூலை.04**

தமிழ்நாடு அரசால் கட்டுமான தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காக்க தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் மூலமாக தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம், விபத்து ஊனம், இயற்கை மரணம், தனிநபர் விபத்து மரணம், பணியிடத்தில் விபத்து மரணம், வீட்டு வசதி நலத் திட்ட உதவித் தொகை போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் 2021-22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற, சொந்தமாக வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, சொந்தமாக வீட்டுமனை வைத்திருந்தால் அவர்களாகவே வீடு கட்டிக்கொள்ள நிதியுதவி வழங்கும் வகையிலும் அல்லது வீட்டுமனை இல்லாதவர்களுக்கு





தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற நிதிஉதவி அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.அதன்படி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் ஆண்டுதோறும் 10,000 பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக 4 இலட்சம் ரூபாய் வரை வீட்டுவசதித் திட்ட நிதி உதவித் தொகை வழங்கும், 400 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.அந்த வகையில், நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் வீட்டு வசதித்திட்டத்தில் பெறப்பட்ட 103 விண்ணப்பங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, இதுவரை 33 பயனாளிகளுக்கு அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சொந்தமாக வீட்டுமனை உள்ள 64 (BLC) தொழிலாளர்களுக்கு தலா ரூ.4,00,000/- வீதம் ரூ.2,56,00,000/- மதிப்பில் அவர்களாகவே வீடு கட்டிக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வீட்டு வசதித்திட்டத்தில் பயன்பெற்ற ராசிபுரம் வட்டம், புதுப்பட்டி கிராமம், இ.சிபாளையம் பகுதியைச் சேர்ந்த சித்ரா, க/பெ.பூபதி என்பவர் தெரிவித்ததாவது, நாங்கள் கூலி வேலை செய்து வருகிறோம். எனது கணவர் கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து பல வருடங்களாக உறுப்பினராக இருந்து வருகிறார். நாங்கள் 37 வருடங்களாக குடிசை வீட்டில் வசித்து வந்தோம். நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்துள்ளதால், வீட்டு வசதித்திட்டம் குறித்து தொழிலாளர் நல அலுவலகத்தில் தெரிவித்தார்கள். அதன்படி, உரிய ஆவணங்களுடன் சொந்தமாக வீட்டுமனை உள்ள தொழிலாளர்கள் அவர்களாகவே வீடு கட்டிக்கொள்ளும் திட்டத்தில் விண்ணப்பித்தோம். தற்பொழுது, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வீட்டுவசதி திட்டத்தில் வீடு கட்டிக் கொள்ள ரூ.4.00 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. சொந்தமாக வீடு கட்ட வேண்டும் என்பது எங்களது பல வருட கனவாகும். தற்பொழுது எங்களது கனவு நிறைவேறியுள்ளது. இத்திட்டத்தினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தொழிலாளர்களின் சார்பில் நிறைந்த மனதுடன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

தொகுப்பு
**தே.ராம்குமார்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**நாமக்கல் மாவட்டம்.**

# மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் கட்டப்பட்டுள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்

## முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்

**மயிலாடுதுறை,ஜூலை.04-**

தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மயிலாடுதுறை மாவட்டம் தருமபுரம் சாலையில் ரூ.1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் 5544 சதுரஅடி பரப்பளவில் தரைத்தளம், முதல் தளத்துடன் கூடிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்து வைத்தார்கள்.



இந்த நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு அறை, பிரசவ அறை, மருந்தகம், ஆய்வுக்கூடம், புறநோயாளிகள் பிரிவு, எக்ஸ்-ரே, ஸ்கேன் அறை உள்ளிட்டவைகள் அமையப்பெற்றுள்ளது. இன்றைய தினம் நடைபெற்ற திறப்பு விழாவில் மாவட்ட கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து, நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் .செல்வராஜ் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை துணை இயக்குநர் மரு.அஜீத் பிரபுகுமார் நகர் மன்ற துணை தலைவர் .சிவக்குமார் நகர்மன்ற குழு உறுப்பினர் காந்திராஜன் மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் வீரமுத்துகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் அருகே காசி முனியப்பா திருக்கோவிலில் ஆனி மாத திருவிழா

**பெரம்பலூர்,ஜூலை.04-**

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் பரவாய் அருகே சின்னப்பரவாய் என்ற கிராமத்தில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ காசி முனியப்பா திருக்கோவிலில் வருடாந்திரம் ஆனி மாத திருவிழா குலதெய்வ வழிபாட்டுக்காரர்கள் ஒன்று சேர்ந்து நடைபெறுவது வழக்கமாக உள்ளது இந்த நிலையில் கடந்த 1.7.25 அன்று மாலை 6.00 மணி அளவில் குடி அழைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது அதனை தொடர்ந்து 2.7.25 அன்று காலை 9.5 மணிக்கு மேல் ஸ்ரீ காசி முனியப்பா சுவாமிக்கு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தெய்வத்திற்கு மாவிளக்கு மற்றும் பொங்கல் படைத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது அதனை தொடர்ந்து கிடா வெட்டு நிகழ்ச்சி நடைபெற்றதுஅதனைத் தொடர்ந்து சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்று இதில் சுமார் 1000 திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது இந்த திருக்கோவிலில் திருவிழா அன்று சுமார் 10க்கும் மேற்பட்டோருக்கு குடியை மறக்க காசி முனியப்பா சுவாமியே வேண்டி கையில் சோப்பு கயிறு கட்டப்பட்டது இதனால் குடி மறந்து விடுவார்கள் என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கை மேலும் இந்த திருக்கோயிலில் பில்லி சூனியம் எடுத்தல் மற்றும் தொழில் வளர்ச்சி மேம்பட.குழந்தை பாக்கியம் பெற .நோய் நொடிகள் நீங்க இந்த திருக்கோயிலில் தரிசனம் செய்தால் அவர்களின் குறைகள் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை இந்த நம்பிக்கை காலங்காலமாக குலதெய்வ வழிபாட்டுக்காரர்கள் மற்றும் பொதுமக்கள் கடைபிடித்து வருகின்றனர்.இந்த திருவிழாவில் பெரம்பலூர், அரியலூர், சேலம், உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்

## முதலமைச்சர் காணொளி மூலம் திறந்து வைத்தார்



**புதுக்கோட்டை,ஜூலை.04-**

தமிழ்நாடு முதலமைச்சர் (03.07.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, அடையாறு, சாஸ்திரி நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையங்களை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம்ஃ மாநகராட்சி, கலீப் நகர் 1-ஆம் வீதியில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலெக்டர் மு.அருணா, கலந்து கொண்டு, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகங்களை வழங்கி, நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டார். பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்கள் நோயில்லா நல் வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல் வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ் நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், நோயில்லா நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா , புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் , புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.விஜயகுமார் (அறந்தாங்கி), புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன், புதுக்கோட்டை மாநகர் நல அலுவலர் மரு.காயத்ரி, புதுக்கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில்நாயகி, மண்டல துணை வட்டாட்சியர் ஆ.லட்சுமணன், உதவிப் பொறியாளர் கலியக்குமார், பலர் கலந்துகொண்டனர்.

# திருமருகலில் திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டம்

**நாகப்பட்டினம்,ஜூலை.04-**

நாகப்பட்டினம் மாவட்ட திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டம் திருமருகல் சந்தைப்பேட்டையில்

நடைபெற்றது. திருமருகல் வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வசெங்குட்டுவன் வரவேற்றார். தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் தலைமை வகித்தார். திரைப்பட இயக்குனர் கரு.பழனியப்பன் பேசியதாவது: திமுகவின் 60 ஆண்டு கால வரலாற்றில் அதிமுகவினர் வரும் சட்டசபை தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க உள்ளனர். வேல் தூக்கி வந்து முருகன் மாநாடு நடத்தி நமது வழி தோன்றலாக இருக்கும் பெரியாரையும் அண்ணாவையும் கேவலப்படுத்திய பொழுது கீழே உட்கார்ந்து ஐந்து அதிமுகவின் முன்னாள் அமைச்சர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இதை பார்க்கும் போது அதிமுகவை பாஜக சாப்பிட போகிறது என தெரிகிறது. இதனால் தான் இவர்களை எல்லாம் நம்பி பயனில்லை என அதிமுகவினர் திமுகவிற்கு வாக்களிக்க உள்ளனர்.மேலும் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு திமுகவின் திட்டங்களை எண்ணி நகையாடிய கட்சிகள் தமிழ்நாட்டில் மகளிர் உரிமைத் தொகை வழங்கியதற்கு பின் இந்தியா முழுவதும் உள்ள கட்சிகள் அதனை வாக்குறுதியாக அறிவித்து வருகிறது. முதல்வரின் திட்டங்களால் இந்தியாவில் உயர்கல்வி கற்போர் சதவீதம் தமிழ்நாட்டில் 52 சதவீதமாக உயர்ந்துள்ளது. பிற மாநிலகளில் தான் 48 சதவீதம் உள்ளது. திமுக இந்துக்களுக்கு எதிரான கட்சி என கூறுபவர்கள் கூறட்டும்.எச். ராஜா வகையறாக்கள் இந்து கோவிலை எங்களிடம் ஒப்படையுங்கள் ஒப்படையுங்கள் என்று சொல்வதற்கு காரணம் நம்மை மீண்டும் கோயிலுக்கு வெளியே நிறுத்துவதற்கு முயற்சிக்கிறார்கள் என்றார். இளம்பேச்சாளர் மேகநிதி மற்றும் பலர் பேசினர்.முன்னாள் அமைச்சர் மதிவாணன்தலைமை செயற்குழு உறுப்பினர் மேகநாதன் மாவட்ட அவைத்தலைவர் செல்வம் நாகை நகர்மன்ற தலைவர் மாரிமுத்து, துணைத்தலைவர் செந்தில்குமார் ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன் ஆர். டி.எஸ்.சரவணன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக் தொழிலாளர் அணியின் அமைப்பாளர் சந்தோஷ் நெசவாளர் அணியின் அமைப்பாளர் இளம் சுந்தர் அயலக அணியின் துணைத்தலைவர் விஜயகணபதி மற்றும் பலர் கலந்து கொண்டனர். திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகம்மதுசுல்தான் நன்றி கூறினார்.


வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கிருஷ்ணகிரி

ந.க.எண்.மே.எ.அதிமு.1363/2025/டி
நாள்: 03.07.2025

சுப்பிரமணி
த/பெ.துரைசாமி,
மல்லிப்பட்டி கிராமம்,
கேத்துநாயக்கன்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 307 ...... மனுதாரர்

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி. ........ எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய, **எனது தாயார் திருமதி.மங்கம்மாள் க/பெ.துரைசாமி** என்பவர் கடந்த 07.10.2017-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்துநாயக்கன்பட்டி அஞ்சல், மல்லிப்பட்டி கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

//உத்தரவுப்படி//

மனுதாரர்
சுப்பிரமணி
த/பெ.துரைசாமி,
மல்லிப்பட்டி கிராமம்,
கேத்துநாயக்கன்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 307
செல்: 9442444538

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **SOUNDHARYA NAARAYANE .R, D/o. Rajagopal, Date of Birth : 05.08.1999, Aged 25 Years, Permanently Residing at : D.No.2/45H-D1, Pudhu Erikarai Road, Reddiyur, Alagapuram PO, Salem District, Tamilnadu - 636 004.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**SOUNDHARYA NAARAYANE.R**

**ENROLLMENT NOTICE**

**After 10 days of the publication of this notice and within three months thereafter. I, G. S. Mahalakshmi, D/o. A. G. Srinivasan, Aged 22 years, Permanently residing at, D.No. 6/220, Anusonai Village, via Kelamangalam, Denkanikottai Taluk, Krishnagiri District, Tamil Nadu- 635113. Intend to have my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai - 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.**

**G. S. Mahalakshmi.**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **ANDREW SANJAI .J.C, S/o. Jeyasingh, Date of Birth : 30.03.2003, Permanently Residing at : D.No. 20/1, Kambar Street, Maharaja Circle, Near Anand Maligai, Mahendrapuri, Chinnatirupathy PO, Salem District, Tamilnadu - 636 008.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**ANDREW SANJAI .J.C**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **RAMYA.S, D/o. Sundaramoorthy, Date of Birth: 21.09.2000, Permanently Residing at : D.No. 12/11, Pillaiyar Nagar 1st Street, Court Road, Hasthampatti PO, Salem District, Tamilnadu - 636 007.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**RAMYA .S**

**மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம்/ சார் ஆட்சியர் அலுவலகம், மேட்டூர்**
**இ.ப.சிப.எண் -505/2025/E**
**நாள்:16/6/2025,**
**இந்திராணி க/பெ. மாதேஷ்**
**கதவு எண்-159, பெரிய வடகம் பட்டி,**
**டேனிஷ் பேட்டை கிராமம்,**
**காடையாம்பட்டி வட்டம்,**
**சேலம் மாவட்டம்-636354.**
**செல்-8056631105**
**மனுதாரர்.**
**// எதிர் //**
**உயர்திரு சார் ஆட்சியர் அவர்கள்,**
**சார் ஆட்சியர் அலுவலகம், மேட்டூர்.**
**....எதிர் மனுதாரர்...**
**அறிவிப்பு**
**மேற்படி மனுதாரர் ஆகிய எனது கணவர் மாதேஷ் என்பவர் கடந்த 03/06/1985-ஆம் தேதியில் பெரிய வடகம் பட்டி, டேனிஷ் பேட்டை கிராமம் காடை யாம்பட்டி வட்டம் இறந்து விட்டார். அவரது இறப்பு தற்போது பதிவு செய்யப்பட வில்லை. இந்நிலையில் பட்டா , வாரிசு சான்று மற்றும் இதர ஆவணங்கள் பெறுவதற்காக ஆகிய காரணத்திற்காக இறப்புச் சான்று தேவைப்படுவதால் மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்புச் சான்றிதழ் கோரி மேற்படி அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 7 தினங்களுக்குள் மேற்படி நடுவர் முன் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனைகள் தெரிவித்துக் கொள்ளலாம்.**
**மனுதாரர்.**
**இந்திராணி க/பெ. மாதேஷ்**
**கதவு எண்-159**
**பெரிய வடகம் பட்டி,**
**டேனிஷ் பேட்டை கிராமம்,**
**காடையாம்பட்டி வட்டம்,**
**சேலம் மாவட்டம்-636354.**
**செல்-8056631105**

**மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம்/ சார் ஆட்சியர் அலுவலகம், மேட்டூர்**
**இ.ப.சிப.எண் -504/2025/E**
**நாள்:16/6/2025,**
**இந்திராணி க/பெ. மாதேஷ்**
**கதவு எண்-159, பெரிய வடகம் பட்டி,**
**டேனிஷ் பேட்டை கிராமம்,**
**காடையாம்பட்டி வட்டம்,**
**சேலம் மாவட்டம்-636354.**
**செல்-8056631105**
**மனுதாரர்.**
**// எதிர் //**
**உயர்திரு சார் ஆட்சியர் அவர்கள்,**
**சார் ஆட்சியர் அலுவலகம், மேட்டூர்.**
**....எதிர் மனுதாரர்...**
**அறிவிப்பு**
**மேற்படி மனுதாரர் ஆகிய எனது மாமியார் ராஜம்மாள் என்பவர் கடந்த 14/03/2000-ஆம் தேதியில் பெரிய வடகம் பட்டி, டேனிஷ் பேட்டை கிராமம் காடை யாம்பட்டி வட்டம் இறந்து விட்டார். அவரது இறப்பு தற்போது பதிவு செய்யப்பட வில்லை. இந்நிலையில் பட்டா , வாரிசு சான்று மற்றும் இதர ஆவணங்கள் பெறுவதற்காக ஆகிய காரணத்திற்காக இறப்புச் சான்று தேவைப்படுவதால் மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்புச் சான்றிதழ் கோரி மேற்படி அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 7 தினங்களுக்குள் மேற்படி நடுவர் முன் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனை கள் தெரிவித்துக் கொள்ளலாம்.**
**மனுதாரர்.**
**இந்திராணி க/பெ. மாதேஷ்**
**கதவு எண்-159 பெரிய வடகம் பட்டி,**
**டேனிஷ் பேட்டை கிராமம்,**
**காடையாம்பட்டி வட்டம்,**
**சேலம் மாவட்டம்-636354.**
**செல்-8056631105**

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சிப எண். 137 / 2025 / ஆ 2
வீரப்பன், S/O. வெங்கடாஜலம்,
க.எண். 13 / 129 , கஸ்பட்டி,
இருப்பாளி கிராமம்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
.............. மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
எடப்பாடி வட்டம் , சேலம் மாவட்டம்.
...... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை வெங்கடாஜலம் த / பெ. இராமசாமி என்பவர் கடந்த 25 –02 –2004 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்து உள்ளார். மேற்படிமனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /

A. ANTONY RABINSTON,B.A.,B.L.
ADVOCATE, SANKARI.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
ந.க. எண். 278 / 2025 / அ
வெங்கடேஷ், S/O. அய்யம்பெருமாள்,
க.எண். H120, வடக்கு தெரு–1,
சின்னமணலி கிராமம்
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
.............. மனுதாரர்
/ எதிராக /
ஆணையாளர் அவர்கள்,
எடப்பாடி நகராட்சி, சேலம் மாவட்டம்.
...... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தந்தைவழி தாத்தா பெரிய கவுண்டர் என்பவர் கடந்த 22 – 01 –1994 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக்–கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /

மு. பிரவீன்குமார். B.B.A., L.L.B,
ADVOCATE, SANKARI.

தமிழ்நாடு அரசு
நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை– பேரூராட்சிகளின் இயக்ககம்
**நன்னிலம் தேர்வுநிலை பேரூராட்சி, திருவாரூர் மாவட்டம்**
செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், நன்னிலம் – 610 105. E-mail: nannilamtp@gmail.com

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ந.க.எண்.274/2025/அ1** **நாள்: 25.06.2025**

நன்னிலம் தேர்வுநிலை பேரூராட்சியில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள் 1998 மற்றும் 2000–ன்படியான கீழ்க்காணும் பணிகளுக்கு இணையதளம் வழியாக (இணையதள முகவரி **https://tntenders.gov.in**) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| பணிகள் விவரம்: **இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டம் 2025-26** நன்னிலம் பேருந்து நிலையம் மேம்பாட்டு பணி மேற்கொள்ளுதல் | | |
|---|---|---|
| ஒப்பந்தப் புள்ளி மதிப்பு (ரூ. லட்சத்தில்): **61.00** | வைப்புத் தொகை ரூ: **61000/-** | பணி முடிக்கும் காலம்: **6 மாதங்கள்** |

ஒப்பந்தப்புள்ளிகள் 16.07.2025 மாலை 3.00 மணி வரை மின்னணு ஒப்பந்தப்புள்ளி வழியாக பெறப்படும். மேலும் விபரங்கள் **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரி வழியாகவும், அல்லது அலுவலக நேரத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**ப.ராஜசேகரன்,** பேரூராட்சி மன்ற தலைவர், நன்னிலம் தேர்வுநிலை பேரூராட்சி திருவாரூர் மாவட்டம்
**சா.உஷா,** செயல் அலுவலர், நன்னிலம் தேர்வுநிலை பேரூராட்சி திருவாரூர் மாவட்டம்
செ.ம.தொ.இ / **3424** / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு
**திருப்பூர் மாவட்டம் – பேரூராட்சிகள் நிர்வாகம் முத்தூர் பேரூராட்சி**
**அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (ITPHDS) 2025-2026**
**முத்தூர் பேரூராட்சி வார்டு எண்.6, தொட்டியபாளையம் தோப்பு தோட்டம் பகுதியில் புதிய சமுதாயக்கூடம் அமைத்தல்**

**ந.க.எண்: 166/2025** **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** **நாள்: 23.06.2025**

1. முழுமையான விவரங்களுக்கு **https://tntenders.gov.in** இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. திருப்பூர் மாவட்டம் முத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரால் சமுதாயக்கூடம் அமைக்கும் பணி (ஒன்று) செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரிகளில் இலவசமாக **24.06.2025** முதல் **16.07.2025** வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக் கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் : **16.07.2025 மாலை 3.00 மணி**
ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **16.07.2025 மாலை 3.30 மணி**

**செயல் அலுவலர், முத்தூர் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம்.**
செ.ம.தொ.இ/3386/ஒப்பந்தப்புள்ளி/2025

**தமிழ்நாடு அரசு**
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை**
**மங்களூர் ஊராட்சி ஒன்றியம்**

**மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
ந.க.எண்.அ2/1612/2025 நாள்.30.06.2025

மங்களூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 2025–26ஆம் ஆண்டு 15th Finance Health Building திட்டத்தின் கீழ் PHC New Building கட்டிடம் கட்டுவதற்கு கடலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர், அவர்களின் ந.க.எண்.அ6/2233/2025 நாள்.25.06.2025ன்படி நிர்வாக அனுமதி வரப்பெற்றது. எனவே, வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) அவர்களால் கீழ்காணும் விவரப்படியான பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய்) | முன்வைப்பு தொகை (1%) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|
| 1 | Construction of New Building to Rural Primary Health Centre at Thozhuthur Panchayat | 15000000 | 150000 | 6 மாதம் |

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் **10.07.2025** முதல் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்.

| | | |
|---|---|---|
| 1 | மின் ஒப்பந்தப் புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | 25.07.2025 மாலை 4.00 மணி |
| 2 | மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 25.07.2025 மாலை 5.30 மணி |

வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)
ஊராட்சி ஒன்றியம், மங்களூர், கடலூர் மாவட்டம்.
செமதொஇ/3380/ஒப்பந்தப்புள்ளி/2025

**தமிழ்நாடு அரசு**
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
**திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
(CFSIDs) குழந்தை நேய பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2025–2026
(சிவகங்கை, மாவட்ட ஆட்சியர் / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவரின் செயலாணைகள் எண். ந.க.டி.எ7/5259/2024, நாள் 24.06.2025 (online AS DA7,5259,2025 Date :26.06.2025))

1. முழுமையான விபரங்களுக்கு **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்
2. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி வரப்பெற்ற திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் பிரமணப்பட்டி ஊராட்சி குண்டேந்தல்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இரண்டு புதிய வகுப்பறை கட்டிடம் கட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறை முறையில் வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் இலவசமாக 27.06.2025 முதல் 11.07.2025 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்.

| | | |
|---|---|---|
| 1 | மின்னணு ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | 11.07.2025 மாலை 3.00 மணி வரை |
| 2 | மின்னணு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 11.07.2025 மாலை 4.00 மணி |

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
ஊராட்சி ஒன்றியம், திருப்பத்தூர்.
செமதொஇ/3379/ஒப்பந்தப்புள்ளி/2025

# நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்: முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததார்

## கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. பார்வையிட்டார்



**நாமக்கல்,ஜூலை.04-**

தமிழ்நாடு முதலமைச்சர் (03.07.2025) சென்னை, அடையாறு, சாஸ்திரி நகர், நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையங்களை காணொலி காட்சி வாயிலாக மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாநகராட்சி, கொண்டிசெட்டிபட்டி பெரியபட்டி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை பாராளுமன்ற மாநிலங்களவை உறுப் பி னர் / நா மக் கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர். என்.இராஜேஸ்குமார் , கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் , நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் , மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

நகர்புற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை சுகாதார சேவைகளை வழங்கும் வகையில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் மாநகராட்சி கொண்டிசெட்டிபட்டி - பெரியபட்டி பகுதியில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைப்பதன் மூலம் 55,246 மக்கள் பயனடைவார்கள். மேற்படி நிலையத்தில் மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர், ஆய்வக நுட்புநர் மற்றும் மருத்துவமனை பணியாளர் பணியமர்த்தப்பட்டு மருத்துவ சேவை வழங்கப்படவுள்ளது.

மேலும் இன்றைய தினம், பள்ளிபாளையம் நகராட்சி நாட்டாக்கவுண்டன்புதூர் மற்றும் நாமக்கல் மாநகராட்சி கணேசபுரம் பகுதியில் தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பள்ளிப்பாளையம் பகுதியில் 11,648 மக்களும், கணேசபுரம் பகுதியில் 14,742 மக்களும் பயனடைவார்கள். மேலும் இம்மையங்களில் மருத்துவர், செவிலியர், சுகாதார ஆய்வாளர் மற்றும் மருத்துவமனை பணியாளர் பணியமர்த்தப்பட்டு கர்ப்பிணிப் பெண்களுக்கான பரிசோதனைகள், பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய பராமரிப்பு, குழந்தை பிறப்புக்கு பிறகான பராமரிப்பு சேவைகள் வழங்கப்படவுள்ளது. மேலும், காசநோய், நிமோனியா, தட்டம்மை, மஞ்சள் காமாளை, போலியோ போன்ற தொற்று நோய்களுக்கு தடுப்பூசி போடப்படும். மேலும், தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்க்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப்படும். மேலும், வாய் புற்றுநோய், கர்பப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் போன்ற தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளும் வழங்கப்படவுள்ளது.

காய்ச்சல், இருமல் போன்ற பொதுவான உடல் நல பிரச்சனைகளுக்கு புறநோயாளி மற்றும் உள்நோயாளி பிரிவுகளில் ஆரம்ப கட்ட மருத்துவ சிகிச்சைகளும், குடும்ப நல சேவைகள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளும், Td தடுப்பூசி, பொது மருந்துகள், தொற்ற நோய்க்கான மருந்துகள், நாய்க்கடி மற்றும் பாம்புக்கடி மருந்துகள் 24 மணி நேரமும் வழங்கப்படும். மேலும் சர்க்கரைநோய், HbA1c, Urine -albumin, சர்கரை இரத்த அளவு, நோய்த் தொற்றுக்கான பரிசோதனைகள் ஆகிய ஆய்வக பரிசோதனைகள் செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையாளர் க.சிவக்குமார், துணை மேயர் செ.பூபதி, மாமன்ற உறுப்பினர்கள், உட்பட துறைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் மாவட்டம் தாதம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் 7 புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்: முதலமைச்சர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்

## அமைச்சர் இரா.ராஜேந்திரன் குத்துவிளக்கேற்றினார்



**சேலம்,ஜூலை.04-**

தமிழ்நாடு முதலமைச்சர் (03.07.2025) காணொலிக் காட்சி வாயிலாக சேலம் மாவட்டம், தாதம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் 7 புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்களை ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் திறந்து வைத்தார்கள். இதனைத்தொடர்ந்து, தாதம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் , கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, , சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 போன்ற திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

அந்தவகையில் இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை மண்டலம், தாதம்பட்டியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினையும், ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் வக்கீல் காடு, அசோக் நகர், குமரிகிரிப் பேட்டை, ஆண்டிப்பட்டி, சந்தைப்பேட்டை, சின்ன மாப்பாளையம், கரீம் காம்பவுண்டு ஆகிய 7 இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்களையும் திறந்து வைத்தார்கள்.

தாதம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமானது காந்தி நகர் (அம்மாப் பேட்டை), வள்ளுவர் காலனி, அல்லிக்குட்டை, வீராணம் மற்றும் தாதம்பட்டி பகுதியில் உள்ள 35,000 மக்கள் தொகை பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, 15-வது நிதி குழுவின் கீழ் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் 7 புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்களான வக்கீல் காடு, அசோக் நகர், குமரிகிரிப்பேட்டை, ஆண்டிப்பட்டி, சந்தைப் பேட்டை, சின்னமாப்பாளையம், கரீம் காம்பவுண்டு ஆகிய பகுதிகளில் புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சியில் 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வரும் நிலையில் தற்போது ஒரு புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு மொத்தம் 17 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் 25 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் செயல்பட்டு வரும் நிலையில் தற்போது 7 புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு மொத்தம் 32 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் செயல்படவுள்ளது. தாதம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளுக்கான சிகிச்சை, மகப்பேறு மருத்துவம், கர்ப்பிணி மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி, மக்களைத் தேடி மருத்துவம், தொற்று நோய், தொற்றா நோய் தொடர்பான சிகிச்சைகளும் மற்றும் மேற்கண்ட அனைத்து சேவைகளும் 24 மணி நேரமும் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் மாநகராட்சி, திருமணிமுத்தாற்றை தூர்வாரும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

சேலம் மாநகராட்சியில் புனரமைக்கப்பட்ட திருமணிமுத்தாற்றில் கரைகளில் இருபுரமும் நீர் செல்வதற்கு இடையூராக தேங்கியுள்ள மண் மற்றும் செடிகளை தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ஒரு மாதம் காலத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சேலம் மாநகராட்சி அணைமேடு முதல் செவ்வாய்ப்பேட்டை வரை 2.5 கி.மீ தூரத்திற்கு ரூ.25 இலட்சம் மதிப்பில் திருமணிமுத்தாற்றை தூர்வாரும் பணிகள் நடைபெறவுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாநகர பொறியாளர் செல்வநாயகம், செயற்பொறியாளர் செந்தில்குமார், அம்மாபேட்டை உதவி ஆணையர் வேடியப்பன், இணை இயக்குநர் மருத்துவம் மரு.எஸ்.பி.நந்தினி, துணை இயக்குநர்கள் மரு. சௌண்டம்மாள், மரு.யோகானந், மாநகர நல அலுவலர் மரு.முரளி, அம்மாபேட்டை மண்டலக் குழு தலைவர் கே.டி.தனசேகர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பாட்டாளி மக்கள் கட்சி மாநில துணைத் தலைவராக புல்லட் கணேசன் நியமனம்



**கிருஷ்ணகிரி,ஜூலை.04-**

பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களின் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த வேலம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த புல்லட் கணேசன் என்பவரை மாநிலத் துணைத் தலைவராக முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார் தொடர்ந்து புல்லட் கணேசன் தலைவர் மருத்துவர் அன்புமணியை நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றார் இதைதொடர்ந்து ஏராளமான பாட்டாளி மக்கள் கட்சி மாநில மாவட்ட நிர்வாகிகள் அனைத்து கூட்டணி கட்சி பிரமுகர்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர் .

# ராசிபுரம் அரிமா சங்கம் சார்பில் டாக்டர் ஆர். எம்.கிருஷ்ணனுக்கு பாராட்டு விழா



**ராசிபுரம்,ஜூலை.04-**

ராசிபுரம் அரிமா சங்க திருமண மண்டபத்தில் அரிமா தலைவர் பெரியசாமி தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. செயலர் மூர்த்தி அறிக்கை வாசித்தார். மண்டல தலைவர் ரங்கசாமி மண்டல சேர்மேன் வி.பி.சுப்பிரமணியம் மற்றும் அரிமா சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அரிமா டாக்டர் ஆர்.எம்.கிருஷ்ணன், வயது 86. அவரின் மருத்துவ சேவைகளை பாராட்டி தலைவர் பெரியசாமி பொன்னாடை அணிவித்து கவுரவித்தார். டாக்டர் ஆர்.எம்.கிருஷ்ணன் முதன்முதலாக ஊட்டி, குன்னூர் அரசு மருத்துவமனையிலும், பிறகு ராசிபுரம் அரசு மருத்துவமனையிலும் பணியாற்றினார். தொடர்ந்து மருத்துவ சேவை செய்து வருகிறார். சேலம் மாவட்ட டாக்டர்கள் சங்கத் தலைவராகவும், தமிழ்நாடு இந்திய மருத்துவ சங்க மாநிலத் தலைவராகவும், நெறிமுறைக்குழு தலைவராகவும் பணியாற்றியுள்ளார். அரிமா இயக்கத்தில் தலைவராகவும், மாவட்ட தலைவராகவும் 30 ஆண்டுகள் சேவை புரிந்துள்ளார். 1999-ல் பூனா ஐ.எம்.ஏ மாநாட்டில் அகில இந்திய அளவில் சிறந்த மாநிலத் தலைவர் விருது பெற்றுள்ளார். 2012-ல் தமிழக அரசின் சிறந்த டாக்டர் விருதினையும், தங்க மெடல், ரூ.50,000-ம் பரிசுத் தொகையும் பெற்றுள்ளார். ராசிபுரம் ஸ்ரீவித்யா மந்திர் பள்ளியினை 1979ல் தொடங்கி நிறுவனத் தலைவராக பணியாற்றி வருகிறார். இந்நிகழ்ச்சியில் இனியவன் இளங்கோ உள்பட பல அரிமாக்கள் அவரின் சேவையை பாராட்டி பொன்னாடை அணிவித்தனர். முடிவில் பொருளாளர் சிவக்குமார் நன்றி கூறினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# கிருஷ்ணகிரி மாவட்டம் ஆம்பள்ளி மற்றும் ஒசூர் பகுதிகளில் புதியதாக கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்

## முதலமைச்சர் காணொளிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்



**கிருஷ்ணகிரி,ஜூலை.04-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (03.07.2025) சென்னை, அடையாறு சாஸ்திரி நகர், நகர்ப்புற நலவாழ்வு மையத்திலிருந்து, காணொலிக்காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பாக, பர்கூர் வட்டம், ஆம்பள்ளி மற்றும் ஒசூர் வட்டம் காமராஜர் நகர் ஆகிய பகுதிகளில் ரூ.2 கோடியே 40 இலட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, பர்கூர் வட்டம், ஆம்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், கலெக்டர் ச.தினேஷ் குமார் , பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் (03.07.2025) குத்து விளக்கு ஏற்றி வைத்து, நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகளை பார்வையிட்டனர். கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு மக்களுடைய ஆரோக்கியத்திற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தின் மூலம் சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட தொற்றா நோய் உள்ளவர்களுக்கு அவர்களின் வீடுகளுக்கே சென்று மருத்துவ பரிசோதனை செய்து இலவசமாக மருந்து, மாத்திரைகள் வழங்குவதில் இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழ்நாடு திகழ்கிறது. இத்திட்டத்தை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் 'உங்களுடன் ஸ்டாலின்'' மற்றும் 'நலம் காக்கும் ஸ்டாலின்'' ஆகிய இரண்டு முக்கியமான திட்டங்களை அறிவித்துள்ளார்கள். ஜூலை 15 -ல் 'உங்களுடன் ஸ்டாலின்'' என்ற திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கிராமத்திலும் அரசு சார்பாக 'மக்களுடன் முதல்வர்'' 4-வது கட்டம் நடத்தப்பட உள்ளது. அதில் விடுபட்ட மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை உள்ளிட்ட 48 வகையான சேவைகள் வழங்கப்பட உள்ளது. இந்த முகாமில் 'நலம் காக்கும் ஸ்டாலின்'' என்ற திட்டத்தின் கீழ், மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு மருத்துவர்கள் மூலம் பரிசோதனை செய்யப்பட்டு, சிறிய அளவிலான சிகிச்சைகளுக்கு அம்முகாமிலேயே சிகிச்சை வழங்கப்படும். உயர் சிகிச்சைக்கு பெரிய அளவிலான மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து, அங்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படும். அதேபோல், ஒசூர் வட்டாரத்திற்குட்பட்ட காமராஜ் நகர், நகர ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.1 கோடியே 20 இலட்சம் மதிப்பில் 302 சதுர மீட்டர் (3247 சதுர அடி) பரப்பளவில் தரை தளம் மட்டும் கொண்ட கட்டடமாக கட்டப்பட்டுள்ளது. இதில் பிரசவ அறை மற்றும் வார்டு, அவசர சிகிச்சை பிரிவு, ஆய்வகம், மருத்துவ அலுவலர் அறை, கட்டு போடும் அறை, ஊசி போடும் அறை, மருந்தகம் மற்றும் கழிப்பறைகளுடன் கட்டப்பட்டுள்ளது. நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் 1 மருத்துவ அலுவலர், 1 மருந்தாளுநர், 1 ஆய்வக நுட்புநர், 3 செவிலியர்கள், பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் 2 நபர்கள் பணிபுரிவார்கள் என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து, கலெக்டர் , பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் 8 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள். ஒசூர் வட்டாரத்திற்குட்பட்ட காமராஜ் நகர், நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில், ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஒசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி வைத்தனர். இந்நிகழ்ச்சியில், ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் முகம்மது ஷபீர் ஆலம் இ.ஆ.ப., மாவட்ட சுகாதார அலுவலர் மரு.டி.ரமேஷ்குமார், பொதுப்பணித்துறை (க(ம)ப) செந்தில்குமார், மாநகராட்சி துணை மேயர் ஆனந்தையா, உதவி செயற்பொறியாளர்கள் சரவணன், பர்வீனா, வட்டார மருத்துவ அலுவலர் மரு.சிவக்குமார், மருத்துவ அலுவலர்கள் மரு.திரிலோகச்சந்தர், மரு.சங்கரன், மரு.கார்த்திக், மரு.வித்யா, உதவி பொறியாளர்கள் பாலாஜி, பாலகிருஷ்ணன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சங்கரன், சமுதாய சுகாதார செவிலியர் தமிழ்மணி, கண்காணிப்பாளர் சாந்தி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை ராயபுரம் மண்டலம் பேசின் பிரிட்ஜ் சாலையில் மழைநீர் வடிகாலில் உள்ள மண்டல் மண் சேகரிப்பு தொட்டியில் இயந்திரம் மூலம் வண்டல் மண் தூர்வாரும் பணியை மேயர் ஆர்.பிரியா ஆய்வு செய்தார்.

# தர்மபுரி நகர பேருந்து நிலையப் பகுதியில் உணவு பாதுகாப்புத் துறையினர் விழிப்புணர்வு மற்றும் ஆய்வு



**தர்மபுரி,ஜூலை.04-**

தர்மபுரி மாவட்டத்தில், உணவு பாதுகாப்பு துறை சார்பாக மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் கைலாஷ் குமார், எம்.பி.,பி.எஸ்., மற்றும் சேலம் உணவு பகுப்பாய்வு நடமாடும் வாகனம் (பொறுப்பாளர்) முதுநிலை பொது பகுப்பாய்வாளர் நரசிம்மன் இருவரின் வழிகாட்டுதல் மற்றும் ஏற்பாடுகளின் படி தர்மபுரி மாவட்டம் முழுவதும் நடமாடும் உணவு பகுப்பாய்வு வாகனம் உடன் சென்று உணவு பாதுகாப்பு துறை செயல்பாடுகள், ஆய்வக வாகனத்தின் அம்சங்கள் , உணவுப் பொருள்களில் கலப்படம் நிகழ்விடத்திலேயே கண்டறிதல், கலப்படம் இருப்பின் உரிய உடன் நடவடிக்கை மற்றும் உணவு பொருட்கள் பாக்கெட்டுகளில் காண வேண்டிய அம்சங்கள் குறித்த விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தர்மபுரி நகரப் பேருந்து நிலையத்தில் உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் கைலாஷ் குமார், மேற்பார்வையில் தர்மபுரி நகராட்சி மற்றும் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் மற்றும் சேலம் ஆய்வக இளநிலை பொது பகுப்பாய்வாளர் கார்த்திகேயன், பகுப்பாய்வு வாகன ஓட்டுனர் ரகுநாதன் உள்ளிட்ட குழுவினர் உணவு பாதுகாப்பு நடமாடும் பகுப்பாய்வு வாகனம்(food safety on wheel) மூலம் உணவு பொருட்களில் கலப்படம் கண்டறிதல் மற்றும் உணவுப் பொருள் பாக்கெட்டுகளில் காண வேண்டிய அம்சங்கள் குறித்து வாகனத்தில் உள்ள எல்.இ.டி தொடுதிரை வாயிலாக காணொளி காட்சிகள் திரையிட்டு (வீடியோ) உணவு பொருட்கள் கலப்படம் கண்டறிதல் குறித்து விழிப்புணர்வு செய்யப்பட்டது. மேலும் தேயிலை, தேன், பால், நெய், உபயோகப்படுத்திய சமையல் எண்ணெய் , உள்ளிட்ட உணவுப் பொருட்களை கொண்டு கொண்டு நேரடியாக கலப்படம் கண்டறிதல் செயல் விளக்கம் செய்து காண்பித்து விழிப்புணர்வு செய்தனர். மேலும் உணவு பொருள் பாக்கெட்டுகளில் காண வேண்டிய அம்சங்களளான உணவுப் பொருள் பெயர், தயாரிப்பு முகவரி, தயாரிப்பு தேதி, முடிவு தேதி, சைவ, அசைவ குறியீடு, உட்காரணிகள், ஊட்டச்சத்து தகவல்கள், பொருள் எடை, எண்ணிக்கை, நுகர்வோர் தொடர்பு எண் மற்றும் உணவு பாதுகாப்பு உரிம எண் ஆகியவை இருக்க வேண்டியது குறித்து உணவு பொருள் பாக்கெட்டுகளை கொண்டு நேரடியாக செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

நிகழ்வில் பேருந்து நிலைய வளாக கடை விற்பனையாளர்கள், பணியாளர்கள், பேருந்து ஓட்டுநர், நடத்துனர்கள், பொதுமக்கள்,கல்லூரி , பள்ளி மாணவ மாணவியர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். விழிப்புணர்வு பிரசுரங்களும் வழங்கப்பட்டது.

தொடர்ச்சியாக பேருந்து நிலையப் பகுதிகளில் உள்ள தேநீர் கடைகள், பஜ்ஜி போண்டா பலகார கடைகள், நடமாடும் உணவு சிப்ஸ் வகைகள்,ரஸ்க் விற்பனை இடங்களில் உள்ளிட்டவற்றில் ஆய்வு செய்து தேயிலை, சிப்ஸ் மற்றும் உபயோகப்படுத்தி சமையல் எண்ணெய் சில்லி சிக்கன், ரஸ்க் சிப்ஸ் உள்ளிட்டவை மாதிரி எடுக்கப்பட்டு வாகனத்திலேயே ஒரு சில பொருட்கள் முக்கியமாக தேயிலை, சமையல் எண்ணெய் உள்ளிட்டவை பகுப்பாய்வு செய்ததில் மூன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் எடுத்த சமையல் எண்ணெயில் ஒரு எண்ணைய் மட்டும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தி பழைய எண்ணெய் என அதேபோல் நான்கு தேநீர் கடைகளில் எடுக்கப்பட்ட தேயிலையில் ஒரு கடையில் மட்டும் கலப்பட தேயிலை கண்டறியப்பட்டது அவை பறிமுதல் செய்யப்பட்டு அப்புறப்படுத்தி சம்பந்தப்பட்ட கடை விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது.

மேலும் தடை செய்ய தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை அறவே தவிர்க்கவும் கண்டால் உணவு பாதுகாப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கவும்,புட் சேஃப்டி ஆப் மற்றும் புகார் செயலியில் தகவல் தெரிவிக்க விழிப்புணர்வு செய்து பிரசுரங்கள் கடைகளில் ஒட்டப்பட்டது.

எண்ணெய் பலகாரங்கள் மற்றும் தின்பண்டங்கள், சிப்ஸ் வகைகள் அச்சிடப்பட்ட செய்தி தாள் பேப்பர்களில் விநியோகித்தல்,பொட்டலம் இடுதல் கூடாது என விழிப்புணர்வு செய்யப்பட்டு வாழை இலை,மந்தாரை இலை, அச்சிடப்படாத மற்ற பேப்பர் பிளேட் அல்லது பட்டர் பேப்பரில் தர விழிப்புணர்வு செய்யப்பட்டது.

சந்தேகப்படும் வகையிலான மளிகை பொருட்கள் சீரகம், சோம்பு, பருப்பு வகைகள் மற்றும் தின்பண்டங்கள் சிப்ஸ், கார வகைகள் இனிப்பு வகைகள், பொறித்த சிக்கன்உணவு மாதிரிகள் உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் அவர்களால் பல்வேறு இடங்களில் மாதிரி சேகரிக்கப்பட்டு, வாகனத்தில் பகுப்புப்பாய்வுக்கு அளிக்கப்பட்டது. பரிசோதனை முடிவில் உரிய நடவடிக்கை நியமன அலுவலர் உத்தரவுப்படி மேற்கொள்ளப்படும் என தெரிவிக்க ப்பட்டது.

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

## கேப்டனாக முதல் இரு டெஸ்டிலும் சதம்:

# இங்கிலாந்துக்கு எதிராக புதிய சாதனை படைத்த இந்திய கேப்டன் சுப்மன் கில்




**பர்மிங்காம், ஜூலை 04-**

கேப்டனாக முதல் இரு டெஸ்டிலும் சதம் அடித்த 4-வது இந்தியர் என்ற சிறப்பை சுப்மன் கில் பெற்றார்

**இங்கிலாந்து முன்னிலை...**

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் லீட்சில் நடந்த முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நேற்று முன்தினம்தொடங்கியது. 'டாஸ்' ஜெயித்த இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் முதலில் இந்தியாவை பேட் செய்ய அழைத்தார்.

**படிப்படியாக....**

இதையடுத்து யஷஸ்வி ஜெய்ஸ்வாலும், லோகேஷ் ராகுலும் இந்தியாவின் இன்னிங்சை தொடங்கினர். நிதானமாக ஆடிய இந்த ஜோடி 9-வது ஓவரில் பிரிந்தது. லோகேஷ் ராகுல் (2 ரன், 26 பந்து), கிறிஸ் வோக்ஸ் வீசிய பந்தை தடுத்து ஆடிய போது அது பேட்டின் உள்பகுதியில் பட்டு ஸ்டம்பையும் பதம் பார்த்தது. 2-வது விக்கெட்டுக்கு கருண் நாயர் இறங்கினார். அவரும், ஜெய்ஸ்வாலும் அணியை சரிவில் இருந்து படிப்படியாக மீட்டனர்.

**ஜெய்ஸ்வால் 87...**

ஸ்கோர் 95 ஆக உயர்ந்த போது, கருண் நாயர் (31 ரன், 50 பந்து, 5 பவுண்டரி) பிரைடன் கார்ஸ் வீசிய ஷாட்பிட்ச் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து கேப்டன் சுப்மன் கில் வந்தார். மறுமுனையில் சதத்தை நோக்கி முன்னேறிய ஜெய்ஸ்வால் (87 ரன், 107 பந்து, 13 பவுண்டரி) தேவையில்லாமல் வைடாக சென்ற பந்தை அடிக்க முற்பட்டு விக்கெட் கீப்பர் ஜாமி சுமித்திடம் சிக்கினார்.

**தடுமாற்றம்...**

இதன் பின்னர் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் கால்பதித்தார். கடந்த டெஸ்டில் இரு இன்னிங்சிலும் சதம் அடித்து பிரமாதப்படுத்திய பண்ட் இந்த முறை அதிக நேரம் நிலைக்கவில்லை. அவர் 25 ரன்னில், சுழற்பந்து வீச்சாளர் சோயிப் பஷீர் ஓவரில் பந்தை தூக்கியடித்து கேட்ச் ஆனார். தொடர்ந்து இறங்கிய நிதிஷ்குமார் ரெட்டி (1 ரன்) பந்து வெளியே போவதாக நினைத்து பேட்டை உயர்த்த, போல்டாகி மிரண்டு போனார். இதனால் இந்தியா தடுமாற்றத்திற்குள்ளானது.

**கில் 7-வது சதம்...**

இந்த சூழலில் 6-வது விக்கெட்டுக்கு சுப்மன் கில்லுடன், ஆல்-ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா கைகோர்த்தார். இருவரும் மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்துக் கொண்டதுடன் அணியை திடமான நிலைக்கு நகர்த்தினர். அபாரமாக ஆடிய சுப்மன் கில் டெஸ்டில் தனது 7-வது சதத்தை நிறைவு செய்தார்.

**4-வது இந்தியர்...**

இங்கிலாந்து தொடரில் இருந்து இந்திய அணியின் டெஸ்ட் கேப்டன்ஷிப்பை ஏற்றுள்ள சுப்மன் முதல் இரு டெஸ்டிலும் சதம் விளாசியுள்ளார். இதன் மூலம் கேப்டனாக முதல் இரு டெஸ்டிலும் சதம் அடித்த 4-வது இந்தியர் என்ற சிறப்பை பெற்றார். ஏற்கனவே விஜய் ஹசாரே, சுனில் கவாஸ்கர், விராட் கோலி ஆகிய இந்தியர்கள் இத்தகைய சாதனையை படைத்துள்ளனர். இங்கிலாந்து மண்ணில் அடுத்தடுத்து இரு டெஸ்டுகளில் சதம் அடித்த 2-வது இந்திய கேப்டன் என்ற பெருமையையும் (முதலில் முகமது அசாருதீன்) கில் பெற்றார்.

## 2-வது டெஸ்ட் போட்டி:

# சுப்மன் கில் இரட்டை சதம்

**பர்மிங்ஹாம், ஜூலை 04-**

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் இந்திய அணியின் கேப்டன் சுப்மன் கில் இரட்டை சதம் விளாசி அசத்தியுள்ளார்.

**இந்திய அணி பேட்டிங்...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் (ஜூலை 2) தொடங்கியது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்ய, இந்திய அணி முதல் இன்னிங்ஸில் விளையாடி வருகிறது.

**310 ரன்கள்...**

முதல் இன்னிங்ஸில் விளையாடி வரும் இந்திய அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 310 ரன்கள் எடுத்திருந்தது. யஷஸ்வி ஜெய்ஸ்வால் 87 ரன்கள், கருண் நாயர் 31 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். கேப்டன் சுப்மன் கில் சதம் விளாசி அசத்தினார். சுப்மன் 114 ரன்களுடனும் ரவீந்திர ஜடேஜா 41 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

**ஜடேஜா அரைசதம்...**

இந்த நிலையில், நேற்று (ஜூலை 3) இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கியது. ஆட்டம் தொடங்கியது முதலே கேப்டன் சுப்மன் கில் மற்றும் ரவீந்திர ஜடேஜா இருவரும் சிறப்பாக விளையாடி ரன்களை குவித்தனர். ரவீந்திர ஜடேஜா அரைசதம் கடந்து அசத்தினார். இருப்பினும், அவர் 89 ரன்களில் ஜோஷ் டங் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதில் 10 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கும்.

**இரட்டை சதம்....**

மறுமுனையில் சிறப்பாக விளையாடி வரும் சுப்மன் கில் வேகமாக ரன்கள் குவித்து வருகிறார். சிறப்பாக விளையாடிய அவர் டெஸ்ட் போட்டிகளில் அவரது முதல் இரட்டை சதத்தைப் பதிவு செய்தார். அவர் 311 பந்துகளில் இரட்டை சதம் விளாசினார். அதில் 21 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும். இந்திய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 480 ரன்களைக் கடந்து விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

## டி.என்.பி.எல். வெளியேற்றுதல் சுற்று:

# திருச்சியை வீழ்த்தியது திண்டுக்கல்



**நத்தம், ஜூலை 04-**

டி.என்.பி.எல். வெளியேற்றுதல் சுற்றில் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் திண்டுக்கல் அணி திருச்சி அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

**வெளியேற்றுதல் சுற்று...**

9-வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டது. இதில் நேற்று வெளியேற்றுதல் சுற்று ஆட்டம் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் டிராகன்ஸ்- திருச்சி கிராண்ட் சோழாஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்ற திண்டுக்கல் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. அதன்படி திருச்சி அணி முதலில் பேட்டிங் செய்தது. அந்த அணியில் தொடக்க வீரர்களாக வசீம் அகமது மற்றும் சுரேஷ் குமார் களம் இறங்கினர். இதில் வசீம் அகமது 36 ரன்களும், சுரேஷ் குமார் 23 ரன்களும் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர்.

**140 ரன்கள்...**

இதையடுத்து களமிறங்கிய கவுசிக் 9 ரன்களிலும், சஞ்சய் யாதவ் 1 ரன்னிலும், ராஜ்குமார் ரன் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து முகிலேஷ் மற்றும் ஜாபர் ஜமால் ஜோடி சேர்ந்தனர். இதில் முகிலேஷ் 12 ரன்களில் அவுட்டானார். இறுதியில் திருச்சி அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 140 ரன்கள் எடுத்தது. திண்டுக்கல் அணி சார்பில் அஸ்வின் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து 141 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் திண்டுக்கல் டிராகன்ஸ் அணி களமிறங்கியது.

**திண்டுக்கல் வெற்றி...**

அந்த அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய அஸ்வின் அதிரடியாக விளையாடி அரைசதம் கடந்தார். அவர் 83 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரர் ஷிவம் சிங் 16 ரன்களில் ஆட்டமிழந்தார். இந்த நிலையில் 16.4 ஓவர்களில் திண்டுக்கல் அணி 4 விக்கெட்டுகளை இழந்து 143 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் திண்டுக்கல் அணி திருச்சி அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. பாபா இந்திரஜித் 27 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

# கிறிஸ் வோக்ஸ் ஆதங்கம்

இங்கிலாந்து பந்து வீச்சில் ஒருவரையும் குறை கூற முடியாது என்றாலும் சிறந்த முறையில் வீசியவர் யார் என்று தேர்வு செய்யச் சொன்னால் கிறிஸ் வோக்ஸ் என்று சொல்லலாம். 2 விக்கெட்டுகளை அவர் 59 ரன்களுக்கு வீழ்த்தினார். பர்மிங்ஹாமில் நேற்று முன்தினம் (ஜூலை 2) தொடங்கிய 2-ஆவது டெஸ்ட் போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து பந்து வீச்சைத் தேர்வு செய்தது. முதல்நாள் முடிவில் இந்திய அணி 310/5 ரன்கள் குவித்தது. இந்த போட்டியில், ஜெய்ஸ்வாலுக்கும் கருண் நாயருக்கும் எல்.பி.டபிள்யூக்கள் 'அம்பயர்ஸ் கால்' ஆகவில்லை எனில் இந்திய அணியின் பாடு திண்டாட்டமாயிருக்கும் எங்கள் பாடு கொண்டாட்டமாயிருக்கும் என்று கிறிஸ் வோக்ஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது, "அந்த இரண்டு விக்கெட்டுகளும் எங்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தால் அதாவது களநடுவர் எல்.பி. கொடுத்திருந்தால் அம்பயர்ஸ் காலில் ஜெய்ஸ்வால், கருண் நாயர் தப்பியிருக்க முடியாது. 30 ரன்களுக்கு 3 விக்கெட்டுகள் என்றால் எங்களுக்குச் சாதகமாக டெஸ்ட் இன்னும் வலுப்பட்டிருக்கும். முதல் நாளே வேறு மாதிரி அமைந்திருக்கும். நாங்கள் எங்கள் பணிகளைச் சிறப்பாகச் செய்தோம், உணவு இடைவேளைக்குப் பிறகு பிட்ச் ஃபிளாட்டாக மாறி விட்டது. கடைசி செஷனில் 2 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தால் இந்திய டெய்ல் எண்டர்களை விரைவில் வீட்டுக்கு அனுப்பியிருப்போம். ஆனால் ஷுப்மன் கில், ஜடேஜா நன்றாக ஆடினார்கள் என்றார்.

# பாலி தீவில் படகு மூழ்கி விபத்து: 4 பேர் உயிரிழப்பு - 38 பேர் மாயம்

**மணிலா, ஜூலை 04-**

இந்தோனேசியாவில் உள்ள பாலி தீவில் படகு கவிழ்ந்து 4 பேர் உயிரிழந்தனர். 38 பேர் மாயமாகி உள்ளனர்.

இந்தோனேசியாவில் உள்ள பிரபல சுற்றுலா தலமான பாலி தீவு அருகே 65 பேருடன் சென்ற படகு கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான படகில் 53 பயணிகள், 12 பணியாளர்கள் மற்றும் 14 லாரிகள் உட்பட 22 வாகனங்கள் இருந்தன. விபத்து நடந்த தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த அதிகாரிகள் 20க்கும் மேற்பட்டோரை மீட்டனர்.

இந்த விபத்தில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 38 பேர் மாயமானதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் மாயமானவர்களை தீவிரமாக தேடி வருவதாக அதிகாரிகள் கூறினர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

## சூர்யவன்ஷி புதிய சாதனை

19 வயதுக்குட்பட்டோருக்கான இந்திய அணி இங்கிலாந்து அணிக்கு எதிராக 5 ஒருநாள், 2 டெஸ்ட் போடிகளில் விளையாட இங்கிலாந்துக்குச் சென்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டியில் இந்தியா வெல்ல, இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து வென்றது. அடுத்ததாக மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. இந்தப் போட்டி மழையின் காரணமாக 40 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 40 ஓவர்களில் 268/8 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக தாமஸ் ரெவ் 76 ரன்கள் எடுத்தார். அடுத்து விளையாடிய இந்திய அணி 34.3 ஓவர்களில் 274/6 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. 2-1 என தொடரில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. இந்தப் போட்டியில் 14 வயதான இந்திய வீரர் வைபவ் சூர்யவன்ஷி 31 பந்துகளில் 86 ரன்கள் குவித்து அசத்தினார். இதில் 6 பவுண்டரிகள், 9 சிக்ஸர்கள் அடங்கும். இதன்மூலம் யு-19 இந்திய வீரர்களில் அதிக சிக்ஸர்கள் அடித்தவராக சாதனை படைத்துள்ளார்.

## யுகி பாம்ப்ரி ஜோடி முன்னேற்றம்

'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் லண்டனில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் இரட்டையர் பிரிவின் முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் யுகி பாம்ப்ரி- அமெரிக்காவின் ராபர்ட் கலோவே ஜோடி, அர்னியடோ (மொனாக்கோ)- மானுவல் குனர்ட் (பிரான்ஸ்) இணையுடன் மோதியது.

இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடிய யுகி பாம்ப்ரி ஜோடி 7-6 மற்றும் 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

## 3-வது சுற்றில் சபலென்கா

ஆண்டுதோறும் ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் என 4 வகையான 'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மிகவும் கவுரவமிக்கதும், முதன்மையானதுமான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அரினா சபலென்கா (பெலாரஸ்), செக் குடியரசின் மேரி பவுஸ்கோவா உடன் மோதினார். இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சபலென்கா 7-6 (7-4), 6-4 என்ற செட் கணக்கில் மேரி பவுஸ்கோவாவை வீழ்த்தி 3வது சுற்றுக்கு முன்னேறினார்.

## ஆடும் லெவனில் ஸ்மித்

ஆஸ்திரேலிய அணி மேற்கிந்தியத் தீவுகள் நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட், 5 டி20 போட்டிகள் விளையாடுகிறது. இதில் முதல் டெஸ்ட் பார்படாஸில் நடைபெற்றது. அந்தப் போட்டியில் ஆஸி. அணி 159 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இரண்டாவது டெஸ்ட் போட்டி இந்திய நேரப்படி நேற்றிரவு 7.30 மணிக்கு தொடங்கிய து.

இந்தப் போட்டியில் ஸ்டீவ் ஸ்மித் இடம்பிடித்துள்ளார். உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் கேட்ச் பிடிக்கும்போது ஸ்மித் விரலில் காயம் ஏற்பட்டது. இந்தக் காரணத்தினால் மே.இ.தீ. அணிக்கு எதிரான முதல் போட்டியில் பங்கேற்கவில்லை. 2-ஆவது போட்டிக்கான பயிற்சியில் ஸ்மித் ஈடுபட்டுள்ளார். ஸ்மித் அணியில் இணைந்தாலும் முன்னெச்சரிக்கை காரணமாக ஃபீல்டிங்கில் ஸ்லிப்பில் நிற்காமல் எல்லைக் கோட்டுக்கு அருகில் எங்காவது நிற்பார் எனக் கூறப்பட்டுள்ளது. ஜோஷ் இங்லீஷ் அணியில் இருந்து விலகியுள்ளார். கேமரூன் கிரீனுக்குப் பதிலாக லபுஷேன் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் இடம்பெறவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கார் விபத்தில் போர்ச்சுகல் கால்பந்து வீரர், சகோதரர் பலி

## திருமணமான 10 நாட்களில் சோகம்

**லிஸ்பன், ஜூலை 04-**

லம்போர்கின் கார் டயர் வெடித்த விபத்தில் கால்பந்து வீரர்கள் இருவர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கால்பந்து வீரர்...

ஸ்பெயினின் ஜமோரா நகரில் நடந்த கார் விபத்தில் போர்ச்சுகல் கால்பந்து வீரர் டியாகோ ஜோட்டா (28), அவரது சகோதரர் ஆண்ட்ரே சில்வா (26) இருவரும் பரிதாபமாக பலியாகினர். போர்ச்சுகல் எல்லைக்கு அருகில் மேற்குப்புற ஸ்பெயினின் சமோரா பகுதியில் நடந்த கார் விபத்தில் லிவர்பூல் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் டியாகோ ஜோட்டா மற்றும் அவரது சகோதரர் ஆண்ட்ரே சில்வா இருவரும் பரிதாபமாக பலியாகினர்.

**டயர் வெடித்து....**

டியாகோ ஜோட்டா மற்றும் அவரது சகோதரர் ஆண்ட்ரே சில்வா இருவரும் தங்களது சொகுசு லம்போர்கினி காரில் சென்றுகொண்டிருந்தனர். அப்போது முன்னாள் சென்று கொண்டிருந்த காரை முந்த முயன்றபோது, இவர்களின் காரின் டயர் வெடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது. சாலையில் இருந்து பல அடி தூரம் உருண்ட இவர்களது கார் பின்னர் தீப்பிடித்துள்ளது. தீயணைப்பு வீரர்கள் வந்தும் இவர்கள் இருவரையும் காப்பாற்ற முடியவில்லை. இதில், சகோதரர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

**47 கோல்கள்....**

அட்லெடிகோ மாட்ரிட், எஃப்சி போர்டோ மற்றும் வால்வர்ஹாம்ப்டன் வாண்டரர்ஸ் அணிகளுக்காகவும் விளையாடியுள்ளார் ஜோட்டா. 2020 ஆம் ஆண்டு பிரபலமான லிவர்பூர் அணி இவரை 45 மில்லியன் யூரோக்களுக்கு ஒப்பந்தம் செய்தது. ஜோட்டா லிவர்பூல் அணிக்கு 47 கோல்கள் அடித்துள்ளார். மேலும், பிரீமியர் லீக், எஃப்ஏ கோப்பை மற்றும் இரண்டு கரபோ கோப்பைகளையும் வெல்ல உதவினார்.

**10 நாட்களிலேயே....**

ஜோட்டாவுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்புதான் ஜூன் 22 ஆம் தேதி திருமணம் நடந்தது. இவர் தனது சிறுவயது காதலியான ரூட் கார்ட்சோவைத் திருமணம் செய்திருந்தார். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். திருமணமான 10 நாட்களிலேயே கால்பந்து வீரர் கார் விபத்தில் பலியான சம்பவம் ரசிகர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# விருதுநகர் எஸ்.பி. பேச்சுக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம்



**சென்னை, ஜூலை 04-**

"பட்டாசு விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்காக நிவாரணம் கோரி போராடியவர்களை விருதுநகர் எஸ்.பி. மிரட்டியுள்ளது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று அதிமுக பொதுச் செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி அரசுக்கு எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "விருதுநகர் மாவட்டம் சின்னக்காமன்பட்டி பட்டாசு ஆலை வெடி விபத்தில் 8 பேர் உயிரிழந்த நிலையில், நிவாரணம் கோரி போராடிய மக்களை விருதுநகர் எஸ்.பி. மிரட்டியுள்ளது வன்மையாக கண்டிக்கத்தக்கது. போராடும் மக்களின் கோரிக்கையைக் கேட்கக் கூட மனமில்லை; மக்களை மிரட்டவும், அச்சுறுத்தவும் மட்டும் அரசின் குரல்கள் உயர்கின்றனவா?

மக்களை மிரட்டுவது, வன்முறையை கட்டவிழ்த்து விடுவது , சட்டத்தை மீறி செயல்படுவதை எல்லாம் உடனடியாக கைவிட வேண்டும் என அரசை எச்சரிக்கிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## காவலாளி அஜித்குமார் மரணம்:

# மனித உரிமை ஆணையம் விசாரணை

**திருப்புவனம், ஜூலை 04-**

திருப்புவனத்தில் போலீஸ் விசாரணையில் இளைஞர் அஜித்குமார் உயிரிழந்த வழக்கை, தாமாக முன்வந்து விசாரணைக்கு தமிழக மாநில மனித உரிமை ஆணையம் எடுத்தது.

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்திரகாளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமார் போலீஸ் விசாரணையின் போது உயிரிழந்தார். தமிழகம் முழுவதும் இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது தொடர்பாக 5 போலீசார் கைது செய்யப்பட்டு உள்ளனர். ஐகோர்ட் மதுரை கிளையிலும் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. இந்த வழக்கு விசாரணையை தமிழக அரசு சி.பி.ஐ.,க்கு மாற்றி உத்தரவிட்டு உள்ளது.

இந்நிலையில் நேற்று (ஜூலை 03) இந்த வழக்கை, தாமாக முன்வந்து விசாரணைக்கு தமிழக மாநில மனித உரிமை ஆணையம் எடுத்தது. மரண வழக்கில், ஐ.ஜி.,க்கு மாநில மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. சம்பவம் தொடர்பாக, 6 வாரங்களில் விசாரணை நடத்தி அறிக்கை அளிக்க ஐ.ஜி.,க்கு மனித உரிமை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

# மிக சுவையான உணவு கிடைக்கும் 100 இடங்களில் 6 இந்திய நகரங்கள்

**புதுடில்லி, ஜூலை 04-**

சுவை மிகுந்த உணவு கிடைக்கும் உலகின் டாப் 100 நகரங்களில், 6 இந்திய நகரங்கள் இடம் பிடித்துள்ளன.

டேஸ்ட் அட்லஸ் என்ற இணையதளம் உலகம் முழுவதும் உள்ள சிறந்த டிஷ் (உணவு வகைகள்), சிறந்த உணவு நகரங்கள், சிறந்த உணவு பொருட்கள், உணவுக்கு தேவையான சிறந்த பொருட்கள் போன்ற பல பிரிவுகளில் ஆய்வு செய்து பட்டியலை வெளியிட்டுள்ளது.

அந்த வகையில், இந்த இணையதளம் வெளியிட்டுள்ள சுவை மிகுந்த உணவு கிடைக்கும் இடங்களின் பட்டியல், இப்போது சமூக வலைதளத்தில் பேசுபொருளாகியுள்ளது.

உலகின் முன்னணி நகரங்கள் இடம் பெற்றுள்ள இந்த பட்டியலில், 6 இந்திய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.

5வது இடம் பிடித்த மும்பை 4.81 மதிப்பீட்டை பெற்றுள்ளது. இங்கு வடை பாவ், பாவ் பாஜி மற்றும் பாம்பே பிரியாணி பிரபலம். அமிர்தசரஸ் 4.49 மதிப்பீட்டை பெற்று 43வது இடத்தை பிடித்துள்ளது. இங்கு அமிர்தசரி குல்சா பிரபலம். புதுடில்லி 4.48 மதிப்பீட்டை பெற்று, 45வது இடத்தை பிடித்துள்ளது. இங்கு சோலே பதுரே, நிஹாரி, பட்டர் சிக்கன் பிரபலம். ஹைதராபாத் 4.47 மதிப்பீட்டை பெற்று, 50வது இடத்தை பிடித்துள்ளது. இங்கு பிரியாணி பிரபலம்.

கோல்கட்டா 4.41 மதிப்பீட்டை பெற்று, 71வது இடத்தை பிடித்துள்ளது. இங்கு ரசகுல்லா மிகவும் பிரபலம். சென்னை 4.40 மதிப்பீட்டை பெற்று, 75வது இடத்தை பிடித்துள்ளது. இங்கு தோசைகள் மற்றும் இட்லிகள் மிகவும் பிரபலம்.

## வைபவ் சூர்யவன்ஷி அபார ஆட்டம்:

# இங்கிலாந்தை வீழ்த்தியது இந்தியா

**நார்த்தம்டான், ஜூலை 04-**

வைபவ் சூர்யவன்ஷி அபார ஆட்டத்தால் இங்கிலாந்தை 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி வெற்றி பெற்றது.

**சமநிலையில்...**

இந்திய ஜூனியர் கிரிக்கெட் அணி (19 வயதுக்குட்பட்டோர்) இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடுகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. அதன்படி நடைபெற்ற முதல் 2 போட்டிகளின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்ற நிலையில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது.

**வலுவான அடித்தளம்...**

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3-வது ஒருநாள் போட்டி நார்த்தம்டானில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மழை காரணமாக 40 ஓவர்களாக குறைக்கப்பட்ட இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ஆயுஷ் மாத்ரே பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி அதிரடியாக விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன பிஜே டாகின்ஸ் 62 ரன்களும், ஐசக் முகமது 42 ரன்களும் அடித்து அணிக்கு வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். இறுதி கட்டத்தில் கேப்டன் தாமஸ் ரியூ அதிரடியாக விளையாடி 76 ரன்கள் (44 பந்துகள்) அடிக்க இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 268 ரன்கள் குவித்தது. இந்தியா தரப்பில் கனிஷ்க் சவுகான் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**20 பந்துகளில் அரைசதம்....**

இதனையடுத்து 269 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக வைபவ் சூர்யவன்ஷி-ஆயுஷ் மாத்ரே களமிறங்கினர். இதில் ஆயுஷ் மாத்ரே 12 ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இருப்பினும் மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் ஆன வைபவ் சூர்யவன்ஷி இங்கிலாந்து பந்துவீச்சை வெளுத்து வாங்கினார். வெறும் 20 பந்துகளில் அரைசதமடித்து அசத்தினார்.

**அபார வெற்றி...**

ருத்ரதாண்டவம் ஆடிய அவர் வெறும் 31 பந்துகளில் 9 சிக்சர்கள் 6 பவுண்டரிகள் உள்பட 86 ரன்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார். அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த விஹான் மல்கோத்ரா 46 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்வரிசையில் கனிஷ்க் சவுகான் (43 ரன்கள்), ஆம்ப்ரிஷ் (31 ரன்கள்) ஆகியோர் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வெறும் 34.3 ஓவர்களில் இந்திய அணி 6 விக்கெட்டுகளை இழந்து 274 ரன்கள் அடித்து அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# இந்தியாவில் ஹாக்கி விளையாட பாகிஸ்தான் அணிக்கு அனுமதி

**புதுடில்லி, ஜூலை 04-**

அடுத்த மாதம் இந்தியாவின் பீஹாரில் நடைபெற உள்ள ஆசிய கோப்பை ஹாக்கி போட்டிகளில் விளையாட பாகிஸ்தான் அணிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது

இந்தியா - பாகிஸ்தான் இடையே பல ஆண்டுகளாக பிரச்னை நீடித்து வருகிறது. இரு நாடுகளிடையேயான உறவுகளில் ஏற்பட்ட விரிசல், விளையாட்டு துறையிலும் எதிரொலித்தது. கிரிக்கெட் உட்பட எந்தவொரு விளையாட்டிலும் பல ஆண்டுகளாக இந்திய அணியினர், பாகிஸ்தான் சென்று விளையாடுவதில்லை. அதேபோல், அவர்களும் இங்கு வந்து விளையாடுவதில்லை. ஆசிய கோப்பை, உலக கோப்பை போன்ற சில தொடர்களில் மட்டுமே நேருக்கு நேர் மோதும் சூழல் ஏற்படுகிறது. மற்றபடி இரு நாடுகளும் தனிப்பட்ட தொடர்களில் விளையாட்டை தவிர்த்து வந்தன.

சில நேரங்களில் இந்தியா உடன் போட்டிகளில் விளையாட பாகிஸ்தானை சேர்ந்த அமைச்சர்கள், விளையாட்டு வீரர்கள் ஆர்வம் காட்டி, வெளிப்படையாக தெரிவித்துள்ளனர். ஆனால், பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் மற்றும் அதைத் தொடர்ந்து இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் ஆகியவற்றைத் தொடர்ந்து அதிகரித்த பதட்டம் காரணமாக இரு நாடுகளும் மீண்டும் பரம எதிரிகள் பிம்பத்திற்கு சென்றுள்ளன.

இந்த நிலையில், இந்தியாவில் ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 7 வரை ஆடவர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் பாகிஸ்தான் அணி பங்கேற்க முன்வருமா, அதற்கு இந்தியா சம்மதிக்குமா என கேள்விகள் எழுந்தன. ஆனால், இப்போது மத்திய அரசு தரப்பில் பாகிஸ்தான் அணி பங்கேற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. மத்திய உள்துறை அமைச்சகம், வெளியுறவுத் துறை அமைச்சகம், மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் பாக்., பங்கேற்க ஒப்புதல் வழங்கியுள்ளன.

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சக வட்டாரங்கள் தரப்பில் கூறுகையில், '' பல நாடுகள் பங்கேற்கும் போட்டிகளில் எந்த அணி இந்தியாவில் விளையாடுவதையும் நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், இருதரப்புத் தொடர்கள் வேறு'' என்று தெரிவித்துள்ளன. இந்த ஒப்புதல் காரணமாக ஆசிய கோப்பையின் போது இந்தியாவும் பாகிஸ்தானும் ஹாக்கி களத்தில் மோதுவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளன.



தமிழ்நாடு முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் ஆணையின் படி தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க, மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.க. மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்கும் வகையில் ஓரணியில் தமிழ்நாடு இணையதள உறுப்பினர் சேர்க்கை பயிற்சி முகாமை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் அமைச்சர் பெரியசாமி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட செயலாளர் செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், துணைச் செயலாளர் பிலால் உசேன், ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை, மாநகர பொருளாளர் சரவணன் கலந்து கொண்டனர்.

# பரமக்குடியில் தி.மு.க. சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' பொதுக்கூட்டம்



**பரமக்குடி, ஜூலை 04-**

பரமக்குடியில் காந்தி சிலை முன்பு திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு விளக்க பொதுக்கூட்டம் நடந்தது. இக்கூட்டத்திற்கு இராமநாதபுரம் மாவட்டக் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ தலைமை வகித்தார்.பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தர்ராஜன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ரகு,தீர்மான குழு துணைத் தலைவர் திவாகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா, தேர்தல் பார்வையாளரும்,மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளருமான கொடி சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பரமக்குடி நகரச் செயலாளர் சேர்மன் சேது கருணாநிதி வரவேற்றார்.

இளம்பேச்சாளர்கள் காயத்ரி,முகமது அஸ்மத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ்.சுதர்சன், விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல் முருகன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். மேலும் இப்பொதுக்கூட்டத்தில் மாவட்டத் துணைச் செயலாளர் கருப்பையா, செயற்க்குழு உறுப்பினர் மிசா அகமது தம்பி, வடக்கு நகர் செயலாளர் ஜீவரத்தினம், ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்குமார், சக்தி, குணசேகரன்,கதிரவன், அண்ணாமலை, கிருஷ்ணமூர்த்தி உள்பட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் தெற்கு நகர் இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் துரைமுருகன் நன்றி கூறினார்.



திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இரத்த தான கொடையாளர் தின விழாவை முன்னிட்டு இரத்த தான உதவி செய்து பல உயிர்களை காப்பாற்றியவர்களுக்கு மாவட்ட கலெக்டர் சரவணன் விருது மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் பேராசிரியர் டாக்டர் சுகந்தி ராஜகுமாரி, மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் வீரமணி, மருத்துவக்கல்லூரி உதவி முதல்வர் டாக்டர் கீதாராணி, இரத்த வங்கி மேலாளர் டாக்டர் சரண்யா மருதாயி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# ராமநாதபுரத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு



**ராமநாதபுரம், ஜூலை 04-**

ராமநாதபுரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை தமிழக முதல்வர் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்த நிலையில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை பார்வையிட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை சார்பில் மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற நலவாழ்வு மையங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் ராமநாதபுரம் நகராட்சி, பாத்திமா நகர் பகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தையும், ராமேஸ்வரம் நகராட்சி நடராஜபுரம் பகுதியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டடத்தையும் காணொளிக்காட்சியின் மூலம் திறந்து வைத்தார்கள்.

அதனையொட்டி ராமநாதபுரம் நகராட்சி, பாத்திமா நகர் பகுதியில் உள்ள நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்திற்கு மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் சென்று புதிதாக கட்டப்பட்ட நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தில் குத்து விளக்கேற்றி வைத்து மருத்துவமனை வளாகத்தில் உள்ள உட்கட்டமைப்புகளை பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் பொதுசுகாதாரத்துறை மருத்துவ அலுவலர் மரு.அர்ஜுன்குமார், ராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், ராமநாதபுரம் நகர் மன்ற துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், நகராட்சி ஆணையாளர் அஜிதா பர்வின், நகர்நல அலுவலர் மரு.ரத்தினகுமார், வட்டார மருத்துவ அலுவலர் மரு. ஜென்னத் யாஸ்மின், பொறியாளர் அருணகிரி, நகர்மன்ற உறுப்பினர் கயல்விழி மற்றும் மருத்துவ அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே நடராஜருக்கு சிறப்பு பூஜை



**நத்தம், ஜூலை 04-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டூரில் அண்ணாமலையார் கோவிலில் அமைந்துள்ள நடராஜர் சன்னதியில் ஆனி உத்திரத்தை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதையொட்டி நடராஜருக்கு செண்பகபூ, தாமரை வில்வ மாலைகளை கொண்டு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பால்,பழம், இளநீர், திருமஞ்சனம், தேன், சந்தனம் உள்ளிட்ட 32 வகையான அபிஷேகங்களும், மஹா தீபாராதனைகளும் நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். தொடர்ந்து அவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதைப் போலவே கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் அமைந்துள்ள நடராஜர் சன்னதியிலும் ஆனி உத்திரத்தை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது.

# ஒட்டன்சத்திரம் மகாலிங்கேஸ்வரர், சௌடம்மன் திருக்கல்யாண உற்சவ விழா



**ஒட்டன்சத்திரம், ஜூலை 04-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி நகர் ஆலயத்தில் உள்ள மகாலிங்கேஸ்வரர் மற்றும் சௌடம்மன் ஆகிய தெய்வங்களுக்கு மங்கள வாத்தியங்கள் முழங்க திருக்கல்யாண உற்சவ விழா சிவாச்சாரியார்கள் தலைமையில் விமர்சையாக நடைபெற்றது.

நிகழ்வில் தெய்வங்களுக்கு மாலை மாற்றுதல் மற்றும் பூப்பந்து விளையாடுதல் மோதிரம் தேடுதல் உள்ளிட்ட விளையாட்டுகள் நடைபெற்று காண்போரை மெய்சிலிர்க்க வைத்தது, அதனைத் தொடர்ந்து சிவாச்சாரியார்கள் மூலம் திருக்கல்யாண வழிபாடு குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைத்தனர், மேலும் திருக்கல்யாண வைபோகத்தை காண ஒட்டன்சத்திரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் இருந்து ஏராளமான ஆன்மீக பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர், அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு சிறப்பு அன்னதானமும் வழங்கப்பட்டது

# சத்துணவு பணியாளர்களுக்கு தீ தடுப்பு ஒத்திகை பயிற்சி



**நத்தம், ஜூலை 04-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் குழு சார்பாக சத்துணவு அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு தீ தடுப்பு ஒத்திகை குறித்த செயல் விளக்க பயிற்சி முகாம் நடந்தது. இதில் நிலைய உதவி அலுவலர் அம்சராஜன் தலைமையில் 10 பேர் கொண்ட குழு வீரர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர். இதில் கேஸ் சிலிண்டர் உபயோகிக்கும் முறை குறித்தும்,கேஸ் சிலிண்டர் தீ விபத்தை எப்படி கட்டுப்படுத்துவது என்றும் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கபட்டது. முகாமில் சத்துணவு அலுவலர்கள் , பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# கல்வி மெட்ரிக் பள்ளியில் மருத்துவர் தின விழா



**ஒட்டன்சத்திரம் ஜூலை 04-**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், காப்பிலயப்பட்டி, கல்வி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், நடைபெற்ற மருத்துவர்கள் தினவிழாவில் , மழலையர் பிரிவு மாணவர்கள் செவிலியர், மருத்துவர்கள் வேடமணிந்துகலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். பல் மருத்துவர், அஸ்வினி,( சர்வேஷ் பல் மருத்துவமனை, ஒட்டன்சத்திரம் ) அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பள்ளியின் துணை முதல்வர் செல்வி. மங்கையர்கரசி,மூத்த ஒருங்கிணைப்பாளர்கள்காளிதாஸ் ,சிலம்பரசி உள்ளிட்ட மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் விழாவில் பள்ளி மாணவர்களுக்கான மருத்துவ முகாம் நடைபெற்றது

# தி.மு.க. தான் ஆளுங்கட்சியாக இருக்கும்: அருப்புக்கோட்டையில் நடந்த ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ராமச்சந்திரன் பேச்சு



**அருப்புக்கோட்டை, ஜூலை 04-**

அருப்புக்கோட்டை வெள்ளக்கோட்டையில் தெற்கு மாவட்ட திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த பொதுக் கூட்டத்தில் திமுக பேச்சாளர்கள் சூர்யா கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு ஓரணியில் தமிழ்நாடு திட்டம் குறித்து விளக்கி பேசினர். இந்த ஓரணியில் பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கலந்துகொண்டு பேசியதாவது:- இந்த ஆட்சி தொடரும் என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. 2026-ம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் தான் மீண்டும் முதல்வராக வருவார்.சாதி மத பேதமில்லாமல் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் வரும் ஆபத்தை நாம் தடுக்க வேண்டும். அனைவரும் ஒரே குடையின் கீழ் வரவேண்டும் என்பதற்காகத்தான் முதல்வர் இந்த திட்டத்தை அறிவித்துள்ளார். இதன் மூலம் தமிழக அரசின் திட்டங்கள் மக்களுக்கு எந்த திட்டங்கள் கிடைக்கவில்லை என்பது தெரிந்துவிடும். முதலமைச்சர் அனைவருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என நினைக்கிறார்.இன்னும் 25 ஆண்டுகளுக்கு திமுக தான் ஆளுங்கட்சியாக இருக்கும் என பேசினார். நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் சிவப்பிரகாசம் அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாரியப்பன் கண்ணாடி தலைமை செயற்குழு உறுப்பினர் சுப்பாராஜ் மாவட்ட பொருளாளர் பிரபாகரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாபுஜி நகரக் கழகச் செயலாளர் ஏ கே மணி நகர மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி ஒன்றிய கழகச் செயலாளர் பால கணேஷ் பொன்ராஜ், அவைத் தலைவர் கணேசன், நகர பொருளாளர் பெரிய சாமி மாவட்ட பிரதிநிதி அன்பழகன் நகர மன்ற உறுப்பினர்கள் ஜோதி ராமலிங்கம் இளங்கோ திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிறைவாக நகரக் கழகச் செயலாளர் ஏ கே மணி நன்றி கூறினார்.

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டம்

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பங்கேற்பு



**திருமங்கலம், ஜூலை 04-**

திருமங்கலம் சட்டமன்ற தொகுதி டி.கல்லுப்பட்டியில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மண்,மொழி, மானம் காத்திட ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.இந்த கூட்டத்திற்கு டி.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் வ.நாகராஜன் முன்னிலை வகித்தார்.கிழக்கு ஒன்றியச் செயலாளர் த.பாண்டியன், தெற்கு ஒன்றிய செயலாளர் த.தனசேகரன்,பேரூர் செயலாளர்கள் முத்துகணேசன்,வருசைமுகம்மது ஆகியோர் வரவேற்றனர்.

ஏராளமானோர் கலந்து கொண்டு இந்த பொதுக்கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கலந்து கொண்டு 20க்கும் மேற்பட்ட கிரிக்கெட் குழுக்களுக்கு கிரிக்கெட் மட்டை, பந்து உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களை வழங்கி பேசியதாவது:-

பாரதிய ஜனதா கட்சியினை வீழ்த்திடும் வகையில் தமிழக மக்களை ஓரணியில் தமிழகம் என்ற பெயரில் கழகத்தில் இணைத்திடும் விழாவாக இந்த பொதுக்கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

கீழடி முடிவுகளை மத்திய அரசு ஒதுக்கிவிட்டு தமிழர்களின் வாழ்வியல் வரலாறுகளை மறைத்து வருகிறது. தேர்தல் சமயத்தில் கொடுத்து வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிய இந்திய துணைக் கண்டத்தில் முதல் முதல்வராக மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்.

ஜூலை 15ம் தேதி முதல் அனைத்து மகளிருக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கிட முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

சிவகங்கை சம்பவத்தில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உதவிகள் செய்து ஆறுதல் கூறி தமிழக முதல்வர் தாயுள்ளத்துடன் செயல்பட்டு வருகிறார்.

ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் மூலம் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க அமோக வெற்றி பெற்று முதல்வராக மு.க.ஸ்டாலின் இரண்டாவது முறையாக பொறுப்பேற்பது நிச்சயம் என்று பேசினார்.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக இளம் பேச்சாளர்கள் சோவை ச.பூங்கொடி, மா.ஜோஸ்பின் இலக்கியராணி,தொகுதி பார்வையாளர் டிஸ்கோ அலாவுதீன்,மாவட்ட அவைத்தலைவர் நாகராஜன்,துணைச் செயலாளர் லதாஅதியமான்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இளமகிழன்,முத்துராமன், ஒன்றிய செயலாளர்கள் மதன்குமார்,ராமமூர்த்தி,தனபாண்டியன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், செல்வேந்திரன், பரமசிவம், கிருத்திகாதங்கப்பாண்டி, ஜெயச்சந்திரன்,திருமங்கலம் சேர்மன் ரம்யா முத்துக்குமார், ராஜசேகர்,சிவனேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் சிவமுருகன், ஆதிமூலம் மற்றும் டி.கல்லுப்பட்டி வடக்கு,தெற்கு,கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள்,டி.கல்லுப்பட்டி, பேரையூர் பேரூர் கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் நிறைவில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பாண்டிமுருகன் நன்றி தெரிவித்தார்.



தேனி மாவட்டம் பெரியகுளம் நகர்புற நலவாழ்வு மையத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலமாக திறந்து வைத்தை தொடர்ந்து, தேனியில் கலெக்டர் ரஞ்சீத் சிங், தங்கதமிழ்செல்வன் எம்.பி, சரவணக்குமார் எம்.எல்.ஏ முன்னிலையில் குத்து விளக்கேற்றி வைத்து பார்வையிட்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, அடையாறு, சாஸ்திரி நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 52 கோடி ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை மக்கள் பயன்பாட்டிற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். மேலும், 60 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மேயர் ஆர்.பிரியா, பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் சென்னை, அடையாறு, சாஸ்திரி நகரில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மேயர் ஆர்.பிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




நீர்வளத்துறை சார்பில் நபார்டு ஆலோசனை சேவைகள் மற்றும் வசார் லேப்ஸ் நிறுவனம் மூலம் வடிவமைக்கப்பட்ட 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பின் இணையதள சேவையையும், 3 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு செயற்கைக்கோள் அடிப்படையிலான நீர்நிலைகளின் தகவல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பின் இணையதள சேவையையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இ.பி.எஸ். சுற்றுப்பயணம்: பா.ஜ.க.வினருக்கு அழைப்பு

**சென்னை, ஜூலை 04-**

எடப்பாடி பழனிசாமியின் சுற்றுப்பயண தொடக்க விழாவில் பங்கேற்க கூட்டணியில் அங்கம் வகிக்கும் பா.ஜ.க.வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டசபை தேர்தல் நடக்க உள்ளதையொட்டி அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கு தயாராகி வருகின்றன. அந்த வகையில் எதிர்க்கட்சியான அ.தி.மு.க. மீண்டும் அரியணையில் ஏறும் முனைப்பில் தேர்தல் பணிகளை தொடங்கி விட்டது. அதன் ஒரு பகுதியாக



அ.தி.மு.க.. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

தனது முதற்கட்ட சுற்றுப்பயணத்தை எடப்பாடி பழனிசாமி வருகிற 7-ந்தேதி கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சட்டசபை தொகுதியில் இருந்து தொடங்குகிறார். முதற்கட்ட சுற்றுப்பயணத்தை வருகிற 23-ந்தேதி ஒரத்தநாடு, பேராவூரணி, பட்டுக்கோட்டை சட்டசபை தொகுதிகளில் எடப்பாடி பழனிசாமி நிறைவு செய்கிறார். இந்த நிலையில், எடப்பாடி பழனிசாமியின் சுற்றுப்பயண தொடக்க விழாவில் பங்கேற்க கூட்டணியில் அங்கம் வகிக்கும் பா.ஜ.க.வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க.வின் இந்த அழைப்பை ஏற்று வருகிற 7-ந்தேதி மேட்டுப்பாளையத்தில் நடக்கும் தொடக்க விழாவில் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், பொதுச்செயலாளர் ஏ.பி.முருகானந்தம் மற்றும் பா.ஜ.க.வினர் பங்கேற்க உள்ளனர். இதுதவிர எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு சட்டசபை தொகுதிகளிலும் அதிமுகவினர் மட்டுமின்றி, அந்த பகுதியை சேர்ந்த பா.ஜ.க. தலைவர்களும் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# 40 கோடி ரூபாய் மதிப்பில் சென்னை தரமணியில் 'தமிழ் அறிவு வளாகம்'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்

**சென்னை, ஜூலை 04-**

40 கோடி ரூபாய் மதிப்பில் சென்னை, தரமணியில் தமிழ் அறிவு வளாகம் அமைப்பதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (3.7.2025) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சென்னை, தரமணியில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சார்பில் தமிழ் மக்களுக்கான பண்பாட்டுத் தலமாகச் செயல்படவிருக்கும் "தமிழ் அறிவு வளாகம்" கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டி, பணியினை தொடங்கி வைத்தார்.

1994-ம் ஆண்டு முதல் செயல்பட்டுவரும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளுடன் இணைந்து தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றை மீள்கட்டமைக்கும் செயல்பாடுகளையும் இந்நூலகம் மேற்கொண்டு வருகிறது.

இதனை மேலும் சிறப்பாக மேற்கொள்ளும் நோக்குடன், தமிழ் அறிவு வளாகத்தை உருவாக்கும் வகையில் சென்னை, தரமணியில் உள்ள தொழில்நுட்ப வளாகத்தில் 30,000 சதுர அடி நிலத்தை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படும். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சிந்துவெளி ஆய்வு மையம், பொதுவியல் ஆய்வு மையம் ஆகியவை இவ்வளாகத்தில் முக்கிய அங்கங்களாகும். இதற்கான மொத்தக் கட்டுமான செலவு 40 கோடி ரூபாய் ஆகும். தமிழ்நாடு அரசு, தமிழ்கூறும் நல்லுலகத்தின் பல்வேறு அமைப்புகள், நிறுவனங்கள், புரவலர்கள் உதவியுடன் இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேகமாக வாகனம் ஓட்டி இறந்தால் இழப்பீடு இல்லை: சுப்ரீம் கோர்ட்

**புதுடில்லி, ஜூலை 04-**

வேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனம் ஓட்டி உயிரிழந்த நபருக்கு, இன்சூரன்ஸ் நிறுவனம் இழப்பீடு வழங்க தேவையில்லை என்ற கர்நாடக மாநில உயர்நீதிமன்ற உத்தரவை சுப்ரீம் கோர்ட் உறுதி செய்துள்ளனது.

கடந்த 2014ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் தேதி என்.எஸ். ரவிஷா கார் ஓட்டிக்கொண்டு செல்லும்போது விபத்து ஏற்பட்டது. காரில் அவரது தந்தை, சகோதரி மற்றும் சகோதரி குழந்தைகள் இருந்தனர். சாலையில் கார் விபத்து ஏற்பட்டதில் என்.எஸ். ரவிஷா மட்டும் படுகாயம் அடைந்து உயிரிழந்தார். அவரது சடப்பூர்வ வாரிசுதாரர்கள் இழப்பீடு கேட்டு கர்நாடக மாநில உயர்நீதிமன்றத்தை நாடினர். அப்போது, போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றாமல், கவனக்குறையாக, மிக வேகமாக காரை ஓட்டி, சாலையில் கவிழ்த்து விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இதனால் கவனக்குறைவு காரணமாக இந்த விபத்து நடந்துள்ளது. இதனால் எந்தவிதமாக இழப்பீடும் சட்டபூர்வ வாரிசுதாரர் பெற முடியாது என கர்நாடக மாநில உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை தற்போது சுப்ரீம் கோர்ட் உறுதி செய்துள்ளது.

# மக்களை வீடு வீடாக சென்று...(1-ம் பக்க தொடர்ச்சி)

என்று உரத்த குரலில் எழுச்சியுடன் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்.

### வீடு வீடாக சென்றார்...

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வேர்களாகத் திகழும் விவசாயிகளையும், நெசவாளர்களையும், மீனவர்களையும் மற்றும் பல்வேறு தரப்பினரையும் ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்திப் பாதுகாக்க வேண்டியது இந்த அரசின் கடமை என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் உணர்கிறோம் என்றும் அவர்கள் கூறியதைக் கேட்டு முதல்வர் மட்டுமல்லாமல், அங்கு உடனிருந்தவர்களும் பெரிதும் வியந்தார்கள். அதே தெருவில் உள்ள அடுத்தடுத்த வீடுகளுக்கும் முதல்வர் சென்றார். முதல்வர் தம் வீடு தேடி வந்துள்ளார் என்பதை அறிந்து ஒவ்வொரு வீடுகளிலும் இருந்தவர்கள் அத்தனைபேருடைய முகத்திலும் மகிழ்ச்சிக் கலை பொங்கி எழுந்தது என்றால் அது மிகையில்லை.

### இளைஞர்களின்...

மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிய அந்த மக்களிடம் முதல்வர் மாணவர்களுக்கான கல்வி நிதி, மாநில வளர்ச்சிக்காக வழங்கப்பட வேண்டிய நிதிப்பகிர்வு, நியாயமற்ற தொகுதி மறுவரையறை, கொடுமையான நீட் போன்ற நுழைவுத் தேர்வுகள் முதலியவைகளிலிருந்து நம் இளைஞர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டுமா ?. வேண்டாமா ? என்று ஒரு கேள்வியை எழுப்பியதுதான் தாமதம், உடனடியாக அவர்கள் எல்லோரும் சேர்ந்து அப்படி ஒரு கேள்வியே வேண்டாம், நம் இளைஞர்கள்தான் நம் நாட்டின் வருங்காலச் செல்வங்கள், தலைவர்கள், நிபுணர்கள். அவர்களை நம்பித்தான் ஒவ்வொரு குடும்பமும் நம் நாடும் இருக்கிறது.எனவே, அவர்களுடைய எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டியது நம் எல்லோருக்கும் உள்ள முக்கிய கடமையாகும் என்று கூறியதைக் கேட்டதும் முதல்வர், இவர்களிடம் நாம் எதையும் கூறாமலேயே இவர்கள் எல்லாம் நமக்கு வழிகாட்டுவது போல் பதில் கூறி மிகுந்த விழிப்போடு இருப்பதைக் கண்டு நமக்குப் பெருமித உணர்வு தோன்றுகிறது என்று குறிப்பிட்டார்.

### ஓரணியில் தமிழ்நாடு...

அதே போல, டெல்லியின் அதிகாரத்துக்கு அடிபணியாமல் தமிழ்நாட்டின் உரிமையைக் காக்கும் முதல்வர்தான் நம் மாநிலத்தை ஆள வேண்டுமா? என்றும், இவையனைத்தும் சாத்தியப்பட நிலையான ஆட்சியை வழங்கிட மு.க.ஸ்டாலின் போன்ற ஒரு தலைவரால் மட்டும் முடியும் என்று நம்புகிறீர்களா? என்றும் அப்படியானால், நம் மாநிலத்தின் கோடிக்கணக்கான குடும்பங்களுடன், தாங்களும், தங்கள் குடும்பமும் ஓரணியில் தமிழ்நாடு என கரம் கோர்க்க விரும்புகிறீர்களா? என்றும் கேள்விகளை எழுப்பினார். அப்போது அங்கிருந்த பொது மக்கள் எல்லாம் ஆம், ஆம் என்று ஒரே குரலில் மறுமொழி கூறி, முதல்வர் தொடங்கியுள்ள ஓரணியில் தமிழ்நாடு எனும் இயக்கம் மாபெரும் வெற்றி பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை, இந்த அணியில் நாங்கள் அனைவரும் உங்கள் பக்கம் தான் இருக்கிறோம் என்றனர்.

### வெற்றிக்கு அடித்தளம்...

தமிழ்நாட்டை கல்வி, தொழில், பொருளாதார வளர்ச்சிமிக்க மாநிலமாக இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக இப்போது மட்டுமல்ல, எப்போதும் நிலையாக விளங்கச் செய்வதற்கு தாங்கள்தான் என்றும் முதல்வராகத் திகழ வேண்டும். தங்களைப் போன்ற தொலைநோக்குப் பார்வையும், கூர்ந்த மதியும் கொண்டுள்ள பேரறிவாளர்கள்தான் தமிழ்நாட்டை என்றும் தொடர்ந்து ஆட்சிபுரிந்திட வேண்டும் என்பது எங்கள் அனைவரிடமும் உள்ள அசைக்க முடியாத ஒரே கருத்தாகும். ஓரணியில் தமிழ்நாடு என்னும் ஒரே சிந்தனையில் நாங்கள் அனைவரும் உள்ளோம் என்று அந்தப் பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே குரலில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கூறியது தமிழ்நாடு முழுவதும் இந்த இயக்கம் பெறப் போகும் வெற்றிக்கு அடித்தளம் இடிவதாக அமைந்தது.

# கானாவின் வளர்ச்சி பயணத்தில் சக பயணியாக இந்தியா உள்ளது

## பிரதமர் மோடி பெருமிதம்

**அக்ரா, ஜூலை 04-**

கானாவின் வளர்ச்சி பாதையில் இந்தியா கூட்டாளியாக இல்லை. சக பயணியாக உள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அரசுமுறை பயணமாக பிரதமர் மோடி கானா நாட்டிற்கு சென்றுள்ளார். கடந்த 30 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் கானா செல்வது இதுவே முதல் முறையாகும். கானா சென்ற பிரதமர் மோடிக்கு அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரதமர் மோடியை கவுரவிக்கும் வகையில் 21 குண்டுகள் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது.



இதையடுத்து கானா நாட்டின் அதிபர் மஹாமாவை சந்தித்து பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து இரு நாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். இது தொடர்பாக சமூக வலைத்தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது:

அதிபர் மஹாமாவுடனான பேச்சுவார்த்தைகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. எங்கள் உறவுகள் இரு நாட்டு மக்களுக்கு பயனளிக்கும். வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது குறித்து நாங்கள் விவாதித்தோம். நிதி தொழில்நுட்பம், திறன் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் பிற துறைகளில் உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினோம்" என்றார்.

பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம், முதலீடு உள்ளிட்டவை தொடர்பாக ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதைத் தொடர்ந்து பிரதமர் மோடி கூறியதாவது: - கானாவில் கிட்டத்தட்ட 2 பில்லியன் டாலர் அளவிலான முதலீடுகளை இந்திய நிறுவனங்கள் செய்துள்ளன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் எங்களின் பரஸ்பர வர்த்தகத்தை இரு மடங்காக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். கானாவின் வளர்ச்சி பாதையில் இந்தியா கூட்டாளியாக இல்லை. சக பயணியாக உள்ளது. யுபிஐ டிஜிட்டல் பேமெண்ட்கள் விவகாரத்தில் இந்தியா தனது அனுபவத்தை கானாவுடன் பகிர்ந்து கொள்ள தயாராக உள்ளது" இவ்வாறு அவர் கூறினார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் சார்பில் சார்பில் ரூ.130 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தும் வகையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட கலெக்டர் சினேகா மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தஞ்சாவூர் மாநகராட்சி பள்ளியக்ரஹாரம் ஸ்ரீ ஹரி நகரில் நகர்புற நலவாழ்வு மையத்தினை நேற்று திறந்து வைத்ததை தொடர்ந்து, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் குத்துவிளக்கேற்றி மருத்துவ பரிசோதனை செய்து கொண்டார். மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் பாராளுமன்ற உறுப்பினர் முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திரசேகரன், நீலமேகம், மேயர் இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.